
கம்யூனிசம் தோற்றதாம்!
முதலாளித்துவம் வென்றதா?

வெளியீட்டு எண் : 5

முதல் பதிப்பு : மே 1996

பதிப்புரிமை
வெளியீடு : கீழைக்காற்று வெளியீட்டகம்

அச்சு : எழில் பிரிண்ட்ஸ்
சென்னை - 24

நூல் கிடைக்குமிடம் : கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.

விலை : ரூ. 6.00

SEELAN BOOKS
NORWAY
SIGNATURE

## பதிப்புரை

கம்யூனிசம் தோற்றுவிட்டது! சோசலிசத்தை விழுங்கிவிட்டோம், என ஏகாதிபத்திய கொள்ளையர்கள் உலகெங்கும் உரக்க கூச்சலிடுகிறார்கள். இன்னொரு பக்கம் - மார்க்சியம் கெட்டிதட்டி மாரடைத்துவிட்டது; கம்யூனிசத்திற்கு புனிதமான சனநாயக தாயத்து கட்டியிருந்தால் காப்பாற்றியிருக்கலாம், பாவம் பாட்டாளி வர்க்கம் என இழவு விசாரிக்க புறப்பட்டிருக்கிறது சதிகார திரிபுவாத கும்பல்.

சனநாயகம், சமாதான சகவாழ்வு என உள்நாக்கு தெறிக்க ஒப்பித்த முதலாளித்துவம், நாடுகள் தோறும் குவித்துள்ள மண்டை ஓடுகளையும், பிச்சை பாத்திரங்களையும் ஓரங்கட்டி விட்டு, சோசலிச நாடுகளின் சிதிலத்தில் தற்குறிப்பேற்ற அணி கட்டி எதிரிகளும், துரோகிகளும் சேர்ந்திசைக்கிறார்கள். ''அண்ணன் எப்போது சாவான், திண்ணை எப்போது காலியாகும்'' என்று எதிர்பார்த்த கும்பல் போல் சோசலிச நாடுகளின் வீழ்ச்சியை காரணங்காட்டி ''மார்க்சியமே கோளாறு; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் தேவையில்லை'' என்று தனது கதம்ப வாதத்தை பாட்டாளி வர்க்கத்தின் நெஞ்சத்தில் நிறுத்த முயலுகிறார்கள் முதலாளித்துவத்தின் சீடகோடிகள். கிழக்கு ஐரோப்பிய, ரசிய மாற்றங்கள் கம்யூனிச தோல்வியா? அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் தோல்வியா? என்பதனை முன்னாள் சோசலிச நாடுகளின் குறிப்பாக ரசிய அரசியல் சமூக அனுபவங்களின் வாயிலாக விவரிக்கிறது இச்சிறு நூல். குழப்புவதே ஆய்வு என்று கோட்பாடற்று பக்கம் நிரப்புவோர் மத்தியில், குழப்பமான பிரச்சினைகளுக்கு ஒரு திறவு கோளாய் அமைகிறது இவ்வெளியீடு.

தொடராக வந்த கட்டுரைகளை, நூலாக பதிப்பிக்க அனுமதியளித்த புதிய ஜனநாயகம் இதழுக்கு எமது நன்றி! மே நன்னாளில் இந்நூலை தமதாக்கிக் கொள்ளும் வாசகர்களுக்கு வாழ்த்துக்கள்.

பதிப்பகத்தார்.



# முற்போக்கு வேடம் போட்டு முதலாளித்துவ கூத்து

சர்வதேச பாட்டாளிகளின் மாபெரும் தலைவர் மாசேதுங், சீனத்தில் மக்கள் ஜனநாயகத்தையும் அதைத் தொடர்ந்து சோசலிசத்தையும் நிர்மாணித்தவர். சீனா தொடர்ந்து சோசலிசப் பாதையில் முன்னேறுவதைத் தடுத்து, ஒரு தரகு முதலாளித்துவத்தை நிறுவுவதற்கு சீனப் பொதுவுடமைக் கட்சிக்குள் ஒளிந்து கொண்டிருந்த துரோகிகளும், வெளியிலிருந்து ஏகாதிபத்திய சதிகாரர்களும் எத்தணித்துக் கொண்டிருக்கையில் அவர்களை எச்சரிக்கும் முகமாக மாசேதுங் சொன்னார்:

''அவர்கள் சீனாவில் மீண்டும் முதலாளித்துவத்தை நிலை நாட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால், அது அவ்வளவு எளிதானதல்ல. அப்படிச் செய்வது அவர்கள் வாய்கொள்ளாத அளவு, மெல்ல முடியாத அளவு பெரிய துண்டைக் கடித்துக் கொண்டு முழிப்பதைப் போலாகிவிடும்.''

இது சீனாவுக்கு மட்டுமல்ல; சோசலிசப் பாதையில் அடி எடுத்து முன்னேறிய எல்லா நாடுகளுக்கும் பொருந்தும். இந்த உண்மையை சீனத்தில் மட்டுமல்ல முன்னாளைய சோசலிச நாடுக்ளான சோவியத் ஒன்றியத்திலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் இன்று கண்கூடாகக் காண்கிறோம். இந்த நாடுகளில்



கோர்ப்பசேவ்: அதிகாரவர்க்க முதலாளித்துவத்தின் அவதாரம்.

பாட்டாளி வர்க்க சர்வாதிகார ஆட்சியை உள்ளிருந்தே சிதைத்து, அதிகாரத்தைக் கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்கள், முப்பது ஆண்டுகளாக அதிகார வர்க்க முதலாளித்துவ அமைப்பை நிறுவி ஆண்டு வந்தனர். அந்த நாடுகளில் பல்வேறு காரணங்களால் அந்த அதிகார வர்க்க முதலாளித்துவம் நீடித்திருந் தாலும் (சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் 30 ஆண்டுகளாகவும், இன்னும் சீனா, வியத்நாம், கியூபா போன்ற நாடுகளில் 15 முதல் 20 ஆண்டுகளாகவும்) அதையே கூட அவை தக்க வைத்துக் கொள்வது அவ்வளவு எளிதானதாக இல்லை. மாசேதுங் சொன்னதைப் போல் வாய் கொள்ளாத அளவு பெரிய துண்டைக் கடித்துக் கொண்டு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் விக்கித் திண றிப் போனார்கள்.

அதிகாரத்தைக் கைப்பற்றி முப்பதாண்டுகளுக்கு மேலாகி யும், தமது எல்லா நெருக்கடிகளுக்கும் கம்யூனிசத் தலைவர் ஸ்டாலின் மீதே பழி தூற்றி வந்தனர். அடுத்தடுத்து பல அரண்மனை ஆட்சிக் கவிழ்ப்புகள் நடத்திவிட்டு ஸ்டாலினியவா திகள் தூக்கியெறியப்பட்டதாக ஒருவர் மீது அடுத்தவர் முத்திரை

குத்தினர். உண்மையில் ஸ்டாலினும் அவரது வழிவந்தவர்களும் கட்டியெழுப்பியிருந்த சோசலிசக் கட்டுமானம்தான் இந்த அதிகார வர்க்க முதலாளிகள் ஓரளவுக்காவது பொருளாதாரப் பிரச்சினைகள் - தேவைகளைச் சமாளிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. எண்ணெய், நிலக்கரி, இரும்பு, எஃகு, நீர்ப்பாசனம் ஆகிய தொழில் - விவசாய உற்பத்தி தொடர்வதற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் அந்த சோசலிசப் படைப்பாளிகள் பங்களித்தவையாகும்.

சோசலிசக் கட்டுமானத்தின் அடிப்படை அங்கங்களாகிய கூட்டுப் பண்ணைகளையும், அரசுடைமையாக்கப்பட்ட ஆலைகள் - தொழில்கள் - வர்த்தகத்தையும் புதிய அதிகார வர்க்க முதலாளிகள் தமது சுரண்டலுக்கான அடிப்படைகளாக மாற்றிக் கொண்டு சோசலிச, கம்யூனிச அமைப்பு நீடிப்பதாக உழைக்கும் மக்களை ஏய்த்து வந்தனர். ஏகாதிபத்திய சுரண்டல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக சோசலிச நாடுகளின் தோழமையான உதவி என்கிற பெயரில் கொள்ளையிட்டுத் தமது நாட்டுத் தேவைகளுக்கு ஈடுகட்டினர். ஏகாதிபத்திய போர் அபாயம் என்கிற பெயரில், போட்டி போட்டுக் கொண்டு ஆயுதக் குவிப்பில் வெறியோடு ஈடுபட்டனர். அமெரிக்க மேல் நிலை வல்லரசுக்கு எதிராக உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கிய சோவியத் ஒன்றிய மேல்நிலை வல்லரசும், அதன் தொங்குசதை நாடுகளான பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும், மீள முடியாத அரசியல் - பொருளாதார நெருக்கடிகளுக்குள் வீழ்ந்தன.

இவற்றைச் சமாளிப்பதற்கு ஏகாதிபத்திய முகமையாளன் கோர்ப்பசேவ் துவக்கி வைத்த மறு சீரமைப்பு மற்றும் ஜனநாயகப் படுத்துதல் மூலம் சோசலிச, கம்யூனிச முகமூடியைக் கழட்டி விட்டு, அதிகாரவர்க்க முதலாளித்துவத்தினிடத்தில், மேலை நாடுகளின் வகையிலான அப்பட்டமான ஏகபோக முதலாளித்துவத்தைப் படிப்படியாக நிறுவ முயன்றனர். ஆனால் அவர்கள் கனவு கண்டதைப் போல அது அவ்வளவு எளிதாகவும் விரைவாகவும் ஈடேறவில்லை. இரத்தக் களறியுடன் கூடிய பல அதிரடி ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கே வழிவகுத்தது. அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதற்காக புதிய ஏகபோக முதலாளிகளிடையே நடக்கும் வன்முறை மோதல்கள் இன்னமும் முடிந்தபாடில்லை.

இருந்தபோதும் எல்லா இழிகேடுகளுக்கும் இன்னமும் ஸ்டாலின் மீதும் ஸ்டாலினியவாதிகள் மீதும் பழி போடுவது நீடிக்கிறது. அதே சமயம் புதிய ஏகபோக முதலாளிகளும் அவர்களுடைய மேற்கத்திய கூட்டாளிகளும் வாக்களித்தவாறு ஜனநாயகத்தையோ, பொருளாதார முன்னேற்றத்தையோ கொண்டு வர முடியவில்லை.

ஸ்டாலினிசத்தின் கீழ் மக்கள் சொல்ல முடியாத பல கொடிய துன்பங்களை அனுபவித்ததாகவும், யுத்தத்துக்கான தயாரிப்பில் நாட்டின் பொருளாதாரம் மூழ்கடிக்கப்பட்டதாகவும், ஜெர்மனி நாஜி இட்லரை விட ஸ்டாலின் கொடூரமானவர் என்றும் தொடர்ந்து குற்றஞ்சாட்டப்படுகிறது; அவரது தனிப்பட்ட சொந்த வாழ்க்கையின் மீதும் அவதூறு சேறு பூசப்படுகிறது. ஆனால், இன்றைய புதிய ஏகபோக முதலாளிகள் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு உள்ள நிலைமை என்ன? இட்லருக்கு இணை வைத்துச் சொல்லப்படும் ''ஸ்டாலினிச'' காலத்தையும், அதற்கு முந்தைய ஜாரிசக் காலத்தையும் விடப் பல ஆயிரம் மடங்கு கொடூரமானதாகத் தான் உள்ளது.

## ஸ்டாலின் பங்களிப்பு: வரலாற்று உண்மைகள்

பாட்டாளிகளின் தலைமையிலான புரட்சியும் அதன் பிறகு ஏற்பட்ட சோசலிசக் கட்டுமானமும் அந்நாடுகளின் உற்பத்தி சக்திகளுடைய வளர்ச்சியில் மட்டுமல்ல; புதிய உற்பத்தி உறவுகளையும் அதன் விளைவாக மக்களிடையே புதிய சமூக, அரசியல், பண்பாட்டுத் துறையிலும் புதிய மேலான உறவுகளையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டு வந்துவிட்டன. உதாரணமாக, ஜாரிச ஆட்சியில் விவசாயத்தில் தனியுடமை முறை நிலவியது. அதன் பிறகு சோசலிசத்தின் கீழ், கூட்டுப் பண்ணை முறை வந்தது. நிலம் அரசுடமையாக்கப்பட்டு, கூட்டுப் பண்ணைகளில் குவிக்கப்பட்டு, உழவு, களையெடுப்பு, பூச்சி மருந்து தெளிப்பு, அறுவடை முதலியவை நவீனமயமாக்கப்பட்டு, இயந்திரமாக்கப்பட்டது. முதலாளித்துவத்தை மீண்டும் நிலை

நாட்டிய இன்றைய நிலையில் கூட்டுப் பண்ணைகளாக்கப்பட்ட நிலங்களைப் பகிர்ந்தளித்து விவசாயத்தை தொடர்வதும் சாத்திய மில்லை. அல்லது கூட்டுப் பண்ணைகளையே தொழில் கழகங் கள் - கூட்டுப் பங்கு கம்பெனிகளாக்கி, தனியாருக்குப் பங்கு களை விற்பதும், அதிகார வர்க்கத்தினரை வைத்து நிர்வகிப்பதும் முந்தைய அதிகார வர்க்க முதலாளித்துவத்தை விடப் பெரும் மாறுதல்களைக் கொண்டு வந்து விடாது.

எளிமையான ஒரு உதாரணம். சீனாவில் புரட்சி வெற்றி பெற்ற பிறகு ''உழுபவருக்கே நிலம் சொந்தம்'' என்கிற முறையில் மறுபங்கீடு நடந்தது. ''ஒரு குதிரையின் நான்கு கால்கள் நான்கு விவசாயக் குடும்பங்களுக்கு சொந்தமாக்கப்பட்ட ன''. இது சோசலிசத்தை நோக்கிய முதற்படிதான்; என்றாலும், விவசாயிகளிடையே ஒரு புது உறவை ஏற்படுத்துவதாகும். அவர்கள் கூட்டாகக் குதிரையைப் பராமரித்து, தனித்தனித் தேவைகளுக்குத் தகுந்தவாறு பயன்படுத்திக் கொண்டனர். பின் னர் கூட்டுப் பண்ணை உறவுகள் ஏற்பட்டும் விட்டது. அந்த நிலையில் தனியுடைமைப் பொருளாதாரத்தை மீண்டும் கொண்டு வர முடியுமா? கூட்டுடைமையாக்கப்பட்ட குதிரையின் நான்கு கால்களைத் தனித்தனியே வெட்டிப் பங்கீடு செய்து தனியுடைமை யாக்குவதா? இல்லை நால்வரில் வலுத்த ஒருவன் குதிரையையே அபகரித்துக் கொள்வதா?

இது போன்றுதான் சகல பிரச்சினைகளிலும் முதலாளித்து வத்துக்குத் திரும்புவதில் நெருக்கடிகளை முன்னாள் சோசலிச நாடுகள் எதிர்கொண்டுள்ளன. அங்கு முதலாளித்துவத்துக்குத் திரும்பும் போக்கில் உழைக்கும் மக்கள் படும் துயரங்களோ எண்ணிலடங்காதவை.

சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பலவீனப்படுத்தும் முயற்சியின் ஒரு பகுதியாக அங்கு தேசிய இனப் பகைமை, பூசல்களைத் தூண்டி விடுவதற்கு மேற்கு ஏகாதிபத்தியங்கள் தொடர்ந்து பல ஆண்டுகளாக சதிகள் புரிந்து வந்திருக்கின்றன.

மேற்கு ஐரோப்பாவில் கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கின் இயல்பில் தேசிய இனங்க

ளும், தேசிய இன அரசுகளும் உருவானதைப் போல கிழக்கு ஐரோப்பாவிலும் யுரேசிய எல்லைப் பகுதிகளிலும் உருவாக வில்லை. கிழக்கில் ஜப்பானிய, மஞ்சூரியப் பேரரசுகள், தெற்கில் துருக்கியின் ஒட்டோமான் பேரரசு, கிழக்கு ஐரோப்பாவில் ருசிய ஜாரிசப் பேரரசு ஆகியவற்றின் ஆக்கிரமிப்புகளை எதிர் கொண்டு நின்ற பல சிற்றரசுகளும் இணைந்து தற்காப்பு போர்கள் நடத்தி பல இனங்களின் கூட்டரசுகளை நிறுவின. அவற்றின் வளர்ச்சிப் போக்கில் பேரினவாத ஒடுக்குமுறை உருவாகியது.

முதலாம் உலகப் போரினாலும், அதற்குப் பிந்தைய ஆண்டு களிலும் நடந்த இராணுவ, ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புகளாலும் இத்தகைய இன ஒடுக்குமுறையில் சிக்கி பல சிறு தேசிய இனங்களும் அல்லலுற்றன. இப்பிரச்சினையைக் சரியான முறை யில் அணுகித் தீர்வு காண்பதற்கு ஸ்டாலின் முன் வைத்த கோட்பாட்டைப் போற்றி அங்கீகரித்தார், லெனின். அப்போது தான் முதன் முறையாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய பல தேசிய இனங்களின் குடியரசுகளை உள்ளடக்கிய ஒரு பெரும் நாடாக சோவியத் ஒன்றியம் உருவானது. இரண்டாம் உலகப் போரின் போது இத்தாலியின் பாசிச மற்றும் ஜெர்மனியின் நாஜிச ஆக்கிரமிப்பின் கீழ் ஒடுக்கப்பட்ட பல கிழக்கு ஐரோப்பிய தேசிய இனங்களும் ஸ்டாலின், டிட்டோ, டிமிட்ரோவ் போன்ற கம்யூனிசத் தலைவர்களின் தலைமையில் செஞ்சேனையில் அணி திரண்டு, எதிர்ப்புப் போர் புரிந்து வென்ற பிறகு, பல தேசிய இனங்களைக் கொண்ட மக்கள் ஜனநாயக அரசுகள் உருவாகின. அவை தேசிய இன சுயநிர்ணய உரிமையுடன் கூடிய குடியரசு களை அமைத்துக் கொண்டு சோசலிசப் பாதையில் முன்னேறின. சோவியத் ஒன்றியத்தில் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் குருச் சேவ் - பிரஷ்னேவ் கும்பலின் அதிகார வர்க்க முதலாளித்துவ பாசிச ஆட்சி வந்தது. அதைத் தொடர்ந்து பல தேசிய இன், தேசிய சிறுபான்மையின ஒடுக்குமுறை அங்கும், பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் நிறுவப்பட்டது.

இந்த வரலாற்று உண்மைகள் மறைக்கப்பட்டு, ஸ்டாலினது சர்வாதிகார அரசினால் பல யுரேசிய தேசிய இனங்கள் வலுக்கட் டாயமாக சோவியத் ஒன்றியத்தில் இணைக்கப்பட்டதாகவும், இரண்டாவது உலகப் போரைப் பயன்படுத்தி அவரும், வேறுபிற

ஸ்டாலினியவாதிகளும் பல ஐரோப்பிய தேசிய இனங்கள் மற்றும் தேசிய சிறுபான்மையினங்களைக் கூறுபோட்டும், மிரட்டியும் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் இணைத்துக் கொண்டதாகவும் மேற்கு ஏகாதிபத்தியங்கள் பித்தலாட்டப் பிரச்சாரம் செய்தன. இந்நாடுகளில் ''கம்யூனிச'' அரசுகளை ஒழித்து ''ஜனநாயக'' அரசுகளை நிறுவினால்தான் இந்த தேசிய இனங்கள் விடுதலையையும் சமத்துவத்தையும் அடைய முடியும் என்று கூறி இனவெறிக்குத் தூபம் போட்டன. ஆனால் முதலாளித்துவத்தை மீட்பதில் அவர்கள் வெற்றி பெற்ற போதும், அவர்கள் வாக்களித்தபடி தேசிய இனங்கள் மற்றும் தேசிய சிறுபான்மை இனங்களுக்கு உண்மையில் விடுதலை கிடைத்ததா? இல்லை; இந்த இனங்களிடையே கொடூரமான அழிவுப் போர்கள் வெடித்தன; முதலாளித்துவத்தின் கீழ் தேசிய இனங்களின் சுயநிர்ணய, ஜனநாயக உரிமை தருவதாக வாக்களித்த அதே ஏகாதிபத்திய பங்காளிகளின் அரசின் இனவெறிப் படுகொலைகள்தான் தொடரும் துயரங்களாகிவிட்டன.

சோசலிச அரசின் கீழிருந்தாலும் சரி, அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் கீழிருந்தாலும் சரி, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் சுயநிர்ணய உரிமையும், பிரிந்து போகும் உரிமையும் கோருவதில், அதை ஈடேற்றிக் கொள்வதில் நியாயம் உண்டு. ஆனால், சோசலிசக் கட்டுமானத்தின் கீழ் கணிசமான அளவு முன்னேறிய பிறகு, அதாவது இனக் கலப்புகளும், குடியேற்றங்களும் பல ஆண்டுகளாக நடந்துவிடும் ஒரு நாட்டில் மீண்டும் தேசிய இனப் பிரிவுகளின் அடிப்படையில் நாட்டைக் கூறு போடுவதில் எழும் பிரச்சினைகளையும் துயரங்களையும் முன்னாள் சோவியத் ஒன்றியமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இப்போது எதிர் கொண்டு வருகின்றன.

லெனின் தலைமையிலான 1917 அக்டோபர் புரட்சியும், ஸ்டாலின் தலைமையிலான சோசலிச கட்டுமானமும் உருவாக்கிய சோவியத் மனிதர்கள் உலக அதிசயங்களோடு ஒப்பிடும் அளவுக்கான அற்புதங்களை சோவியத் ஒன்றியத்தில் மிகக் குறுகிய காலத்தில் நிகழ்த்திக் காட்டினார்கள். அமெரிக்காவும் பிற ஏகாபத்தியங்களும் 200 ஆண்டுகளில் ஏற்படுத்திய விவசாய - தொழிற்துறை சாதனைகளை இருபதே ஆண்டுகளில் சோவியத்

மனிதர்கள் சாதித்தனர். கிழக்கே பெரியார்,நேரு, தாகூர், சுகர்னோ முதல் மேற்கே பெட்ராண்ட் ரஸ்ஸல், பெர்னார்டு ஷா, சார்லி சாப்ளின் வரை பல நாடுகளைச் சேர்ந்த ''அறிஞர்கள், தலைவர் கள்'' அனைவரும் பிரமித்துப் போய் பாராட்டினார்கள். பிரமாண் டமான கால்வாய்கள், எண்ணெய், வயல்கள் - சுத்திகரிப்பு ஆலைகள், இரும்பு - நிலக்கரிச் சுரங்கங்கள் - ஆலைகள், புதுப்புது நவீன விவசாய இயந்திர ஆலைகள் - பெரும்பண்ணை கள் எழுப்பினர். முதல் உலகப் போரின் முடிவில் ரொட்டிக்கும் சமாதானத்துக்கும் கதறிய அதே மக்கள் சுயதேவைக்கு மட்டு மல்ல ஏற்றுமதிக்கும் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கினர். பாசிச - நாஜிச இராணுவங்களை முறியடித்து உலக சமாதா னத்தை கட்டி எழுப்பினர்.

## ருசியா:
## ஒன்றுபட்ட தேசிய இனங்களை உடைத்தெறிந்த துரோகக் கும்பல்

வரலாற்றில் மிகப் பெரிய குடியேற்றங்களும், தேசிய இனக் கலப்புகளும் ஏற்படாமல் இந்த முன்னேற்றங்களைச் சாதித்திருக்கவே முடியாது.

இதனால், சோவியத் ஒன்றியத்திலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் எளிதில் அவிழ்க்க முடியாத சிக்கல் மிகுந்ததாக தேசிய இனங்களிடையே உறவுகள் ஏற்பட்டு விட்டன. எனவே, அந்த நாடுகளை இன அடிப்படையில் பிளவுபடுத்துவது இரத்தம யமானதாக உள்ளது. ஒரே அரசின் கீழிருந்த சோவியத் குடிமக்கள் துரோகி கோர்பசேவ், சதிகாரன் யேல்ட்சின் கைங்கரியத்தினால் 15 தனித்தனி தேசிய இன அரசுகளாகப் பிரிக்கப்பட்டு ஒருவருக் கொருவர் அந்நியராயினர். ஆலைகள் - பண்ணைகளின் நிர்வாகிக ளாகவும், உழைப்பாளர்களாகவும் இருந்தவர்கள் திடீரென்று அந்நியக் குடியேற்றக்காரர்களாகவும், செஞ்சேனையினர் ஆக்கிர மிப்பு இராணுவமாகவும் கருதப்பட்டனர்.


2.5 கோடி ருசியர்கள், 14 வேறு இனக் குடியரசுகளில் வாழும் அதே சமயம் ருசியர் அல்லாத 1.8 கோடிப் பேர் தங்கள் இன மல்லாத வேறு வேறு இனக் குடியரசுகளில் வாழுகின்றனர்.

அதாவது 4.3 கோடிப் பேர் ''வேற்று'' இனக் குடியரசுகளில் வாழுகின்றனர். இப்பொழுதுள்ள ருசியக் குடியரசின் 14.6 கோடி மக்களில் 81.5 சதவீதத்தினர் மட்டுமே ருசிய மொழி இனத்தவர். மீதி 18.5 சதவீதத்தினர் வேறு மொழி இனத்தவர். பால்டிக் கடற்பகுதியில் தனி நாடுகளாக ஆகிவிட்ட லாட்வியாவில் 34 சதவீதத்தினரும், எஸ்தோனியாவில் 30.3 சதவீதத்தினரும், லித்து வேனியாவில் 9.4 சதவீதத்தினரும் ருசியர்கள். 5.2 கோடி மக்கள் வாழும் உக்ரைனின் கிழக்குப் பகுதி முழுவதும் ருசியமயமா னது; அதன் கிரிமியன் தீபகற்பத்தில் முக்கால் வாசிப்பேர் ருசியர். பைலோ ரசியா குடியரசு என்பதற்கே வெள்ளை ருசியர்களின் நாடு என்றுதான் பொருள்; அதன் இராணுவத்தில் பெரும்பான் மையோர் ருசியர்.

1.2 கோடி ருசியர்கள், மத்திய ஆசியக் குடியரசுகளில் குடியேறியுள்ளனர். 1.7 கோடிப் பேர் வாழும் கஜக்ஸ்தானில் 40 சதவீதத்தினர் ருசியர்கள்; அந்நாட்டின் தலைநகர் அல்மா அட்டாவிலும், கிர்கிஸ்தானின் தலைநகர் பிஷ்கேக்கிலும் 55 சதவீதமானவர்கள் ருசியர்கள். துருக்மேனியக் குடியரசின் தலைந கர் ஆஷ்காபாத்திலும், உஸ்பெனிஸ்தான் குடியரசின் தலைநகர் தாஸ்கெண்டிலும் 35 சதவீதத்திற்கும் மேலானவர்கள், ருசியர்கள்.

இவ்வாறு வேறு பிற இனக் குடியரசுகளில் ருசியர்கள் குடியேற்றம் மற்றும் இனக் கலப்பு ஏற்பட்டுள்ளது மட்டுமல்ல, ஜியார்ஜியா மற்றும் அர்மேனிய இனத்தவர்களும், அர்மேனிய மற்றும் அஜர்பைஜான் இனத்தவர்களும் இத்தகைய குடியேற்றம், இனக் கலப்புகளுக்குள்ளாகி இருக்கின்றனர். இதனால் வேறு வேறு இனத்தவர் கலந்து வாழும் பிரதேசங்கள் பலவும் பிரிவினையின் போது இரத்தக்களறி வெடிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளன. அதே போல ஒரு தேசிய இனக்குடியரசுக்குள் ளாகவே கிறித்தவர்கள், இசுலாமியர்கள் என்கிற மத அடிப்படை யிலான வேறுபாடுகளும் உள்நாட்டுப் போர்கள் வெடிக்கக் காரணமாகி உள்ளன.

இப்போது ருசியா என்று பிரபலமாகியுள்ள ''ருசிய சோவி யத் சோசலிசக் குடியரசுகளின் கூட்டமைப்பு'' மட்டுமே 21 குடியரசுகளும், ஒரு சுயாட்சிப் பிரதேசமும், பத்து சுயாட்சி




மாவட்டங்களையும் கொண்டிருந்தது. இங்கு வாழும் தாத்தார் கள், பாஷ்கிர்கள், செசியர்கள், துவாக்கள், சுவாக்கள், புரியாத் தாக்கள் போன்ற 120-க்கும் மேற்பட்ட மொழி இன, தேசிய இனச் சிறுபான்மையினர் மட்டும் 2.5 கோடிப் பேர். ருசியக் குடியரசின் ஆளுகையின் கீழ் உள்ள தூந்தரகாகசிய மலைகள் - காடுகளிலும் பரந்து விரிந்த சைபீரிய சமவெளிகளிலும் வாழும் இந்தச் சிறுபான்மையினர் பல மொழிகளும் பேசுபவர்கள்; இசுலாம், கிறித்தவம், பௌத்தம் ஆகிய வெவ்வேறு மத நம்பிக்கையுடையவர். சுதந்திர உணர்வும் போர்க் குணமும் மொழி - மத - பண்பாட்டுப் பெருமை பாராட்டுபவர்கள். இவ்வளவு பன்முகத் தன்மையுடைய சிறுபான்மைப் பிரிவு மக்கள் அனைவரையும் சரியான அரசியல் பொருளாதார, சமூகக் கொள்கைகளினால் அரவணைத்துக் கொண்டிருந்தது சோசலிச அமைப்பு. அவர்கள் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சுயாட்சி நடத்திக் கொண்டனர். அவர்களது மொழி, கல்வி, பண்பாடு, தனித்துவம், மத உரிமைகள் நசுக்கப்படவில்லை. ஆனால் குருச்சேவ் பிரஷ்னேவ் ஆட்சிக் காலத்தில் அதிகார வர்க்க முதலாளித்துவப் பாசிசத்தின் கீழ் அவர்களது உரிமைகள் பறிக்கப்

பட்ட போதும், சோவியத் ஒன்றிய அமைப்புதான் மேலானது என்று ஏற்றிருந்தனர். ஆனால் ஏகாதிபத்திய ஊடுருவலும், அதிகரித்து வந்த அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் தனிநாடு, தனி அரசுதான் தீர்வாகும் என்ற முடிவுக்குப் பல தேசிய இன மக்களையும் தள்ளின.

## கோர்ப்பசேவ், யெல்ட்சின்;
## ஸ்டாலின் மேல் பழிபாடும் வாலறுந்த நரிகள்

பிரஸ்ட்ரொய்காவையும் கிளாஸ் நாஸ்ட்டையும் கொண்டு வந்த கோர்பச்சேவ், தேசிய இன ஒடுக்கு முறைக்குக் காரணம் ஸ்டாலினின் சதியும் சர்வாதிகாரமும்தான் என்று பழி போட்ட கோர்பச்சேவ், லாட்வியா, எஸ்டோனியா, லித்துவேனியா ஆகிய பால்டிக் தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து போகும் நடவடிக்கை களில் இறங்கிய போது தனது பாசிச, ருசியப் பேரினவாதக் கோர முகத்தைக் காட்டினான். பிரிவினைப் போராளிகள் மீது இராணுவக் கவச வண்டிகளை ஏவினான். தெருக்களில் இரத்தம் சிந்தும் உள்நாட்டுப் போர் துவங்கியபோது மேலை ஏகாதிபத்தி யங்கள் நிர்பந்தங்கள், மிரட்டல் காரணமாக அக்குடியரசுகள் பிரிந்து போக அனுமதிக்கப்பட்டன.

1992 டிசம்பரில் பழைய குருச்சேவ் - பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்த அதிகார வர்க்க முதலாளியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைமை, புதிய ஏகபோக முதலாளிய கோர்பி - யேல்ட்சின் கும்பலுக்கு எதிராக அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு நடவடிக்கையில் இறங்கியது. பாசிச சதிகாரன் யேல்ட்சின் அதிகாரத்தைப் பிடிப்ப தற்கு வசதியாக பல தேசிய இனவெறித் தலைமைகளுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டும், சோவியத் ஒன்றியத்தைப் பல கூறுகளாகப் பிளந்து பலவீனப்படுத்தும் மேலை ஏகாதிபத்திய நிர்பந்தத்தை ஏற்று தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து போவதை அனுமதித்தான். ஆனால் அவற்றைத் தொடர்ந்து தனது இராணுவ மேலாதிக்கத்தில் வைக்கும் நோக்கத்தோடு ''சுதந்திரக் குடியரசுக ளின் பொது நல அமைப்பு'' (CIS) ஒன்றை நிறுவிட அவசர அவசரமாக ஒப்பந்தம் போட்டான். அணு ஆயுதங்கள், போர்க் கப்பல்கள் உட்பட இராணுவப் பேராயுதங்களைப் பகிர்ந்து கொள்வதிலும் இராணுவப் படைப் பிரிவுகளைப் பிரித்து

ஒதுக்குவதிலும் இன்னமும் தீர்வு காண முடியாமல் முறுகல் நிலை நீடிக்கிறது. யேல்ட்சின் கும்பல் ருசியாவில் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டவுடன் பிரிந்து சென்ற தேசிய இனங்களின் மீது தேவையானால் இராணுவத்தை ஏவி ஆதிக்கத்தை நிலை நாட்டவே எத்தனிக்கும். யேல்ட்சினுக்கு எதிராக அதிகாரப் போட்டியில் ஈடுபட்டுள்ள ருசிய தேசிய இனவெறியன் ஜெரினோவ்ஸ்கி கும்பல் வெற்றி பெற்றாலோ இது மேலும் தீவிரமாகும்.

தேசிய இனக் குடியரசுகள் பிரிந்து செல்வதற்கு முன்பாகவே, அவற்றுக்கிடையில் பிரதேசங்களைக் கைப்பற்றும் போர்கள் மூர்க்கமாகத் துவங்கி விட்டன. ஜியார்ஜியாவுக்கும் அர்மேனியாவுக்கும், அர்மேனியாவுக்கும் அஜர்பைஜானுக்கும் இடையே நடந்த கொடூரமான போர்கள் ஒரு குறுகிய காலத்திலேயே பல ஆயிரம் பேரைப் பலி கொண்டு விட்டன. குறிப்பாக, நகர்னோ - கராபாக் பிரதேசத்தின் மீது அர்மேனியாவும் அஜர்பைஜானும் உரிமை பாராட்டி நடந்த கொடிய போரில் ஒரு சில நாட்களில் 15,000 பேர் கொல்லப்பட்டனர்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்துக்கு அடுத்து, தொடரும் துயரமாக, இட்லரின் நாஜிப் படையை விஞ்சி விட்ட போர்க் கிரிமினல் குற்றங்கள் நிறைந்ததாக இருப்பது முன்னாள் யுகோஸ்லாவிய நாட்டில் நடக்கும் தேசிய இனப் போர்கள். யுகோஸ்லாவியர் அனைவரும் ஸ்லாவியப் பூர்வகுடிகள் தாம்; துருக்கிய மற்றும் ஆஸ்ட்ரோ - ஹங்கேரியப் பேரரசுகளுக்கெதிராகவும் நீண்ட போராட்ட வரலாறு படைத்தவர்கள்தாம்; இறுதியாக இத்தாலிய முசோலினியின் பாசிசப் படைகளுக்கு எதிராக கம்யூனிஸ்டுகளின் தலைமையில் கொரில்லாப் போரில் வென்று ஒரே நாடாக அமைந்தவர்கள்தாம். இருப்பினும் ஆக்கிரமிப்புப் படைகளின் சதி, பிளவுகள் காரணமாக பல்வேறு இன, மதப் பிரிவுகளாகி விட்டனர். ஸ்லோவேனியா, குரோஷியா, செர்பியா, மாசிடோனியா, மாண்டி நிக்ரோ, போஸ்னியா - ஹெர்சகோவினா ஆகிய ஆறு குடியரசுகளையும், வோஜோவேனியா, கேஸோபா ஆகிய இரண்டு சுயாட்சிப் பிரதேசங்களையும் கொண்டிருந்தது முன்னாள் யுகோஸ்லாவியா. 1991 - ஜூனுக்குப் பிறகு இந்தக் குடியரசுகள் பிரிந்து போவதாக அறிவித்து யுகோஸ்லாவியா நாடு கலைக்கப்பட்டது.

பிரிந்து போன குடியரசுகளில் ஸ்லோவேனியா, மாசிடோனியா, மாண்டிநிக்ரோ ஆகியவை மட்டுமே அவ்வளவாக மாற்று இனத்தவர் இல்லாத பிரதேசங்களைக் கொண்டவை. யுகோஸ்லாவியாவின் மக்கள் தொகையில் தனியொரு இனமாக அதிகமானவர்கள் செர்பியர்கள்தாம். ஆனால் இவர்கள் செர்பியக் குடியரசு தவிர போஸ்னியா - ஹெர்சகோவினாவில் பெரும்பான்மையினராகவும், குரோஷியாவில் கணிசமான பகுதிகளில் பெரும்பான்மையினராகவும் உள்ளனர். செர்பியாவுடன் இணைத்துக் கொள்வதற்காக செர்பியக் குடியரசு போரிட்டு வருகிறது. குரோஷியாவில் உள்ள செர்பியர்கள் வாழும் பகுதியைத் தக்க வைத்துக் கொள்ளவும், போஸ்னியாவில் தமது மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளைக் கைப்பற்றவும் குரோஷியா போரிட்டு வருகிறது. ஆனால் போஸ்னியா - ஹெர்சகோவினாவின் நிலையோ துயரங்கள் நிறைந்தது. ஒருபுறம் செர்பியர்கள், குரோஷியர்கள் என்று இன ரீதியிலும், மறுபுறம் கிறித்தவர்கள், இசுலாமியர்கள் என்று மத ரீதியிலும் பிளவுபட்டுள்ள போஸ்னியர்கள், தேச இனக் கலப்போடு திட்டுத் திட்டாகவும், தொடர்ச்சியான நிலப்பகுதியாக இல்லாமலும் வாழும் பிரதேசங்களை கொண்ட போஸ்னியா ஒரு தனி தேசிய இனமாக உருப்பெற்று வந்தது. போஸ்னியர்கள் பிளவுபடாத தனிக் குடியரசாகவே வாழ விரும்பினாலும், குரோஷியர்களும், செர்பியர்களும் அவர்களைப் பிளவுபடுத்தியும் படை அனுப்பியும் கொடிய உள்நாட்டுப் போரை கடந்த மூன்றாண்டுகளாக நடத்தி வருகின்றனர். இப்போது குரோஷியாவும் போஸ்னியாவும் கூட்டுச் சேர்ந்து செர்பியர்களுக்கு எதிராகப் போரிடுகின்றனர். ஐ.நா.வின் பெயரால் மேற்கு ஏகாதிபத்தியங்கள் நுழைந்து போஸ்னியாவைப் பத்து மாவட்டங்களாகப் பிரித்துக் கூறு போட்டுக் கொள்ள முயலுகின்றன. அங்கு நடக்கும் உள்நாட்டுப் போரில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு என இனவெறி தாண்டவமாடுகிறது.

இதுதவிர செர்பியக் குடியரசில் உள்ள கேஸோபோவில், அல்பேனியர்கள் பெரும்பான்மையாகவும் வோஜோனியாவில் ஹங்கேரிய - ருமேனியர்கள் கணிசமான அளவிலும் வாழுகின்றனர். இதேபோல முன்னாள் சோசலிச நாடுகளாக கிழக்கு ஜெர்மனி, போலந்து, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி ஆகிய

நாடுகளில் எல்லாம் பிற தேசிய இன மக்கள் சிறுபான்மையின ராக வாழும் பிரதேசங்கள் நிறைந்திருக்கின்றன. அவர்களது உரிமைகள் நசுக்கப்பட்டு நீருபூத்த நெருப்பாகக் கனன்று கொண் டிருக்கிறார்கள்.

''மாஸ்கோவில் உள்ள அந்த வேசிமகன்கள் என்ன நினைத் துக் கொண்டிருக்கிறார்கள்? ஆஃப்கானில் நான் போரிட்ட போது, அது என் தாய் நாட்டைக் காப்பதற்கான போர் என்று நம்பினேன். இப்போது எந்த நம்பிக்கையோடு நான் போரிடு வேன்?'' - இன்று ருசியாவை ஆளும் யெல்ட்சின் கும்பலுக்கு எதிராகத்தான் இப்படி ஆத்திரம் பொங்கக் குமுறுகிறார், ருசிய இராணுவ அதிகாரி ஒருவர். ஏன்? ருசியக் கூட்டரசின் கீழ் உள்ள 89 தேசிய சிறுபான்மை இனங்களில் ஒன்றான செசனியர்க ளின் சுதந்திரத்துக்கான - ஜனநாயகத்துக்கான போராட்டத்தை ஒடுக்குவதற்கு ஏவிவிடப்பட்டு ருசிய இராணுவத்தின் பீரங்கி வண்டிப் படைப் பிரிவின் தளபதி அவர்.

4000 படை வீரர்களைக் கொண்ட ஒரு ''ரெஜிமெண்டை'' விமானத்தில் இருந்து இறக்கி விட்டால் போதும்; இரண்டே மணி நேரத்தில் செசன்யாவின் தலைநகர் குரோஸ்னியைக் கைப்பற்றிவிடலாம். அதன் மூலம் 12 இலட்சம் மக்கள் வாழும் செசன்ய சுயாட்சி மாநிலத்தை தன் முழுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து விடலாம் என்று ருசிய அதிபர் யேல்ட்சினும் இராணுவ அமைச்சம் பாவெல் கிரெசேவும் துச்சமாக எண்ணினர். எதற்கும் முன்னெச்சரிக்கையாக 40,000 துருப்புக்களைக் கொண்ட பீரங்கிக் கவச வண்டிப் படையை ஏவினர்; மக்கள் நெருக்கமாக வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது நெருப்புக் குண்டு மழை பொழிந்தனர். ஆனால் இந்திய இராணுவம் யாழ் நகருக்குள் விண்ணில் இருந்து சிப்பாய்களை இறக்கிவிட்ட போது நடந்த தைப் போல குரோஸ்னிக்குள் நுழைந்த போது ருசியப் படைகள் பலிகடாவாகிப் போனார்கள். ''பலிகடா'' என்பதன் நேரான பொருளில் - துப்பாக்கிப் படைப் பிரிவின் முன் நிறுத்தப்படும் மரண தண்டனைக் குற்றவாளிகளைப் போல ருசியப் படை வீரர்கள் கொன்றுகுவிக்கப்பட்டனர்.

இப்படி ருசிய இராணுவம் தம் சொந்த நாட்டு மக்களைக் கொன்று குவிப்பதையும், தனது படையினரே வெட்கக் கேடான

முறையில் செத்துமடிவதையும் முதன் முறையாக நேரடி ஒளிப ரப்பு மூலம் வானொளியில் கண்டு ருசிய மக்கள் வெறுப்பும் ஆத்திரமுமடைந்தனர். ஒரே வாரத்தில் இந்தப் போர் 15,000 பேர்களைக் காவுக் கொண்டது. லட்சக் கணக்கானோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகினர். செசன்யர்களும் தொடரும் ருசிய இராணுவத் தாக்குதலைக் கண்டஞ்சி அடிபணிவதாக இல்லை. மலைகள் - காடுகளுக்குப் பின்வாங்கி அதிரடிப் போரைத் தொடருகின்றனர். அமெரிக்காவுக்கு வியத்நாமைப் போல, இந்தியாவுக்கு காஷ்மீரைப் போல, இலங்கைக்கு ஈழத்தைப் போல, ஏன் ருசியாவுக்கே இன்னொரு ஆஃப்கான் போரைப் போல, ருசிய இராணுவம் செசன்யப் புதை சேறில் சிக்கிக் கொண்டது.

## ஏகாதிபத்திய நல்லாசியுடன் ஏவல் நாய்களின் புறப்பாடு

''ஸ்டாலினிய சர்வாதிகாரத்தை முற்றாக அகற்றியதில் கோர் பச்சேவை விட துணிச்சலான ஜனநாயக - சீர்த்திருத்த சிற்பி'' என்று அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களால் போற்றப்ப டும் யேல்ட்சின் சுயவடிவம் செசன்யா போரில் அப்பட்டமாக வெளிப்பட்டது. சோவியத் ஒன்றியத்தைப் பிளந்து பலவீனப்ப டுத்துவதில் உடந்தையாக இருந்து தூண்டிய அந்த மேலை ஏகாதிபத்தியங்கள், செசன்யாவின் தனி தேச விடுதலைப் போரை ஒடுக்குவதில் மறைமுகமாக யேல்ட்சினை ஆதரிக்கின்றன. யேல்ட்சினை ஆதரிக்கவில்லையென்றால் ருசியாவில் நடக்கும் சீர்திருத்தம் நின்று போய் விடும், பழைய கம்யூனிஸ்டுகளின் கை ஓங்கிவிடும், ''செசன்யா பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும்'' என்று கூறும் ஏகாதிபத்தியங்கள், ருசிய கூட்டமைப்பு பிளவுபடுவதைத் தாம் ஆதரிக்கவில்லை என்கின்ற னர்; அதற்கு முக்கியமான காரணங்களில் ஒன்றாக அமெரிக்கா தெற்கே மெக்சிகோ இன மக்கள் வாழும் தென் பகுதியிலும், கனடா கியூப்செக்கிலும், பிரிட்டன் அயர்லாந்திலும் மற்றும் ஸ்பெயின், பிரான்சு நாடுகளும் இதே பிரச்சினையை எதிர் கொண்டு, சிறுபான்மை தேசிய இன மக்களை ஒடுக்கி வருவதா கும்.

முன்னாள் சோசலிச நாடுகளில் ''கம்யூனிச சர்வாதிகாரத் துக்கு மாற்றாக'' முதலாளித்துவ நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிறுவுவதாக ஏகாதிபத்தியங்களும் யேல்ட்சின் கும்பலும் பீற்றிக் கொள்வது வெறும் சவடால்தான்; அரசியல் பித்தலாட்டம்தான் என்பதை இந்த செசன்யாப் போரும், அதற்கான மூலகாரணமும், விளைவுகளும் வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. ஜனநாய கம் என்கிற பெயரால் அங்கு நடப்பதெல்லாம் தீராத அதிகார வெறிச் சண்டைகளும், துரோகங்கள் - கழுத்தறுப்புகளும், பாசிச ஒடுக்குமுறைகளும், அதனிலும் இழிவான கழிசடை - கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கமும்தான். அராஜகமும் குழப்பமும் நிலை யற்ற அரசியல் நெருக்கடியும் ஏற்படுவதைப் பயன்படுத்திக் கொண்டு முன்னாள் போலிக் கம்யூனிஸ்டுகளும், முன்னாள் இராணுவத் தளபதிகளும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதாகவே முடிகிறது. இதற்கிடையே வளர்ந்து நிலைபெற்றுவிட்ட கிரிமி னல் மாஃபியாக் கும்பல்களின் வன்முறை வெறியாட்டம், முன்னாள் சோசலிச நாடுகளை மட்டுமல்ல, ஏகாதிபத்தியங்கள் அனைத்துக்கும் குலை நடுக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது.

செசன்யா உதாரணத்தையே பாருங்கள். மேற்கு ஏகாதிபத்தி யத்துக்குத் தகவாக சோவியத் ஒன்றியத்தை மாற்றியமைத்து மறு சீரமைப்பு இயக்கம் தீவிரமாக நடந்து கொண்டிருந்த 1989-ஆம் ஆண்டு செசன்யா - இங்குஸ் சுயாட்சி மாநிலத்தின் போலிக் கம்யூனிஸ்டு கட்சியின் முதல் செயலாளராக தோக்கு ஜவ்க யேவை நியமித்தது, கோர்பி கும்பல். அதன் நிர்வாகம் முழுவ தும் ஜவ்கயேவிடம் குவிந்திருந்தது. ஆனால் அவரது தலைமையி லான சுப்ரீம் சோவியத்துக்கு சவாலாக - போட்டி அதிகாரமைய மாக செசன் - தேசிய காங்கிரசை அமைத்தது. செசன் - இங்குஸ் இனத்தைக் குறிக்கும் வைனாக் ஜனநாயகக் கட்சி. அப்போது சோவியத் ஒன்றியக் குடியரசுகள் எல்லாம் சுயாதிபத்திய சுதந்திர அரசாகப் பிரகடனம் செய்து கொண்டதைப் போல செசன் - இங்குஸ் சுயாட்சி மாநிலமும் தனி அரசாக அக்கட்சி அறிவித்தது. ருசிய விமானப் படையின் மேஜர் - ஜெனரலாக இருந்த தஜோகர் துதாயேவ் செசன் தேசியக் காங்கிரசின் நிர்வாகக் குழுவின் தலைவராக்கப்பட்டு கோர்பியின் எடுபிடி ஜவ்கயேவின் அதிகா ரத்தை வீழ்த்தும் முயற்சியில் இறங்கினார். கோர்பி கும்பலிடமி

ருந்து அதிகாரத்தைப் பறிக்கும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக ருசிய கூட்டமைப்பைத் தனி அரசாக அறிவித்த போலி தேசிய இன வெறியன் யேல்ட்சின், துதாயேவை ஆதரித்தார்.

1991-இல் கோர்பிக்கு எதிராக நடந்த பிரஷ்னேவைட் போலிக் கம்யூனிஸ்டுகளின் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பு தோல்வி யுற்றதைப் பயன்படுத்திக் கொண்டு, ருசியாவின் முழு அதிகாரத் தைக் கைப்பற்றியது யேல்ட்சின் கும்பல். அதன் பிரநிதிகளாக உள்துறை மந்திரி, செய்தி - தகவல் துறை மந்திரி ஆகியோரோடு ருசிய நாடாளுமன்றத் தலைவரும் செசன்யருமான கஸ்புலா வோட் குரோஸ்னி போய்ச் சேர்ந்தார். அவர்களது தூண்டுதலால் கோர்பியின் எடுபிடி ஜாவ்கயேவின் அதிகார மையமான சுப்ரீம் சோவியத்தை துதாயேவின் படைகள் சூழ்ந்து கொண்ட அதே சமயம், யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கும்பல் செசன் சுப்ரீம் சோவியத்தைக் கலைத்து ஜாவ்கயேவின் அதிகாரத்தை வீழ்த்தி யது. அதன் பின் யேல்ட்சின், கஸ்புலாடோவ், துதாயேவ் ஆகியோரிடையே அதிகாரத்துக்கான முக்கோணப் போட்டியில் ஆட்சிக் கவிழ்ப்புகளும், தீராத சண்டைகளுமே செசன்யாவின் வரலாறாக உள்ளது.

கோர்பியின் எடுபிடி ஜாவ்கயேவை வீழ்த்தியதோடு, களத் தில் இருந்து விலகிக் கொள்ளும்படி துதாயேவுக்குக் கட்டளை யிட்டது யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கூட்டுக் கும்பல். செசன்யாவில் அதிகாரத்தை மேற்கொள்வதற்காக கஸ்புலாடோவ் எடுபிடி யூரிசெர்னி என்பவன் தலைமையில் மாநில சுப்ரீம் கவுன்சிலையும் நிறுவியது. ஆனால் அதற்குப் பணிய மறுத்து அதிகாரத்தை சுவைத்துவிட்ட துதாயேவ், செசன்ய மக்கள் தேசியப் பொதுப் பேரவையின் பெயரால் ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். யேல்ட்சின் - கஸ்புலாடோவ் கிளப்பிவிட்ட தீவிர தேசியவாத பூதமாகிய துதாயேவ், அவர்க ளுக்கு எதிராகவே திரும்பியது. தனியான தேசியக் காவற்படை திரட்டியது; தேர்தல் நடத்தி துதாயேவை செசன்யாவின் அதிப ராக அறிவித்தது. அது போலித் தேர்தல் என்று நிராகரித்த மாஸ்கோ கும்பல் செசன்ய - இங்குஸ் சுயாட்சி மாநிலத்தில் அவசர நிலையைப் பிரகடனம் செய்தது. அதற்கு பதிலடியாக இராணுவச் சட்டத்தைப் பிரகடனம் செய்தார், துதாயேவ். அவரை

ஒடுக்குவதற்கு மாஸ்கோ படையை ஏவும் என்கிற பீதி, துதாயேவின் நிலையை உறுதிப்படுத்தும் வகையில் செசன்யர்கள் அவர் பின் திரள்வதற்குக் காரணமாக அமைந்தது.

*1992 ஆரம்பத்தில், துதாயேவுக்கு செசன்ய தேசியவாதிகளிடமே எதிர்ப்புக் கிளம்பி, ஆயுதந்தாங்கிய ஆட்சிக் கவிழ்ப்புக்கு ஒரு பிரிவு முயன்றது. துதாயேவ் அதை ஒடுக்கிய கையோடு செசன்ய நாடாளுமன்றத்தைக் கலைத்து, எதிர் தரப்புகளை ஒடுக்கி சர்வாதிகாரியானார். இதன் விளைவாக துதாயேவுக்கு எதிராக ஆயுதந்தாங்கியப் பல குழுக்கள் உருவாகின. தலைநகர் குரோஸ்னியிலும், மலைப்பிரதேசங்களிலும் நிலையிட்டுள்ள அதே சமயம், சமவெளிப் பகுதிகளில் ஆங்காங்கே பிறகுழுக்கள் ஆதிக்கம் வகிக்கின்றன. அவற்றின் மீது துதாயேவ் அடிக்கடி படையெடுத்து ஏறக்குறைய உள்நாட்டுப் போர் நிலையை எட்டியது.*

*1994 மத்தியில் இந்தக் குழுக்கள் அவ்துர்கானோவ் தலைமையில் ஒருங்கிணைந்து ஒரு பெருந்தாக்குதல் தொடுத்ததோடு, மூன்றாண்டுகளுக்கு முன்பு யேல்ட்சினால் தூக்கியெறியப்பட்ட ஜாவ்கயேவ், முன்னாள் சோவியத் ஒன்றிய உளவு நிறுவன அதிகாரிகள் பலரும் இணைந்து ஒரு புதிய தற்காலிக அரசாங்கத்தை நிறுவினர். பிரஷ்னேவைட்டுகள், கோர்பி கும்பலைச் சேர்ந்தவர்கள், இன்றைய ருசிய இனவெறியன் ஜெரினோவ்ஸ்கியைப் போன்றவர்கள் அடங்கிய இந்தத் தற்காலிக அரசாங்கத்தை ஜனநாயக சீர்திருத்த நாடகமாடும் யேல்ட்சின் கும்பலும் ஆதரித்தது. துதாயேவை வீழ்த்தி இந்தக் கும்பலை அதிகாரத்தில் அமர்த்தத்தான் செசன்யாவின் மீது போர் தொடுத்தது ருசிய இராணுவம். இதில் வியப்பு - வினோதம் என்னவென்றால் ஓராண்டுக்கு முன்பு (1995 அக்டோபரில்) ஜனநாயகத்தைக் காப்பது என்கிற பெயரில் எந்த சுப்ரீம் சோவியத் அமைப்பை இராணுவத் தாக்குதல் நடத்தி யேல்ட்சின் கும்பல் கலைத்ததோ, அதையே ஓராண்டுக்குப் பின் செசன்யாவின் இராணுவ ஆதிக்கத்தைக் கொண்டு நிறுவும் வேலையில் இறங்கியது. அப்போது ஸ்டாலினிசவாதி என்று சாடி தூக்கியெறியப்பட்ட அதே காஸ்புலாடோவுடன் இப்போது கூட்டுச் சேர்ந்து முன்புதான் ஆதரித்த துதாயேவை இப்போது கிரிமினல் மாஃபியா கும்பல் என சாடி வீழ்த்தப் படை ஏவினார், யேல்ட்சின்.*

துதாயேவும் கூட மாஸ்கோவில் ஆதிக்கம் வகிக்கும் ருசிய இன ஆளும் பிரிவுகளில் சிலவற்றுடன் நெருக்கமாகவே கூட்டுச் சேர்ந்துள்ளார். செசன்யாவைக் கட்டுப்படுத்துவது அரசியல், பொருளாதார ரீதியில் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்தது. கிழக்கே சைபீரியாவில் இருந்து காஸ்பியன் கடற்தளங்கள், மேற்கு ருசியாவில் உள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகள் வரை பிரதான எண்ணெய்க் குழாய்கள் செசன்யா வழியாகவே போகின்றன. மேலும் செசன்யாவிலேயே எண்ணெய் - எரிவாயு, சுத்திகரிப்பு - உயர்தர விமான பெட்ரோல் எண்ணெய் வளமும் மூலாதாரங்களும் உண்டு. மிக நவீன பன்னாட்டு விமான நிலைய வசதிமிக்கது. இதனால் ருசியாவில் உள்ள பன்னாட்டு கிரிமினல் மாஃபியா கும்பல்கள் எண்ணெய், ஆயுதக் கள்ள விற்பனை ஏற்றுமதிக்கும், ரொக்கப் பணம் கடத்தலுக்கும் (ஹவாலா) மையமாக செசன்யா விளங்குகிறது. எனவே ருசியாவில் ஆதிக்கம் வகிக்கும் கிரிமினல் கும்பல்களில் சில துதாயேவுடன் கள்ளக் கூட்டுச்சேர்ந்து நிதி உதவியும், தனியார் படையும், ஆயுதங்களும் கொடுக்கின்றன. இன்னும் சில, துதாயேவ் கும்பலையே பிளவுபடுத்திக் கட்சி மாறச் செய்கின்றன. துதாயேவ் கும்பலின் கட்டுப்பாட்டில் வரமறுக்கும் வேறு பிற ஆயுதந் தாங்கிய கும்பல்கள் செசன்ய தேசியத்தின் பெயரால் திரண்டுள்ளன.

## பங்கு சண்டையில் போலி கம்யூனிஸ்டுகள்

ருசியாவில் உள்ள புதயோன்னவ்ஸ்கி நகர மருத்துவமனை மீது அதிரடி தாக்குதல் நடத்திய 1000 ருசிய நோயாளிகளைப் பிணைக் கைதிகளாய்ப் பிடித்து, தமது கோரிக்கையை ஏற்கும்படி யேல்ட்சினைப் பணிய வைத்த ஷமில் பாசயேவ் கும்பல், இவன் 1991 ஆகஸ்டில் பிரஷ்னேவைட்டுகள் நடத்திய அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பை எதிர்த்து யேல்ட்சின் கும்பலுக்குத் துணையாக நின்று வெள்ளை மாளிகை மீது ஆயுத தாக்குதல் தொடுத்த படைக்குத் தலைமை தாங்கினான். அதேபோல 1991-இல் கோர்பியின் எடுபிடி ஜாவ்கியேவை அதிகாரத்தில் இருந்து துரத்திய "செசன்ய புரட்சி"யில் யேல்ட்சின் - துதாயேவ் கூட்டுக்கு ஏவலாளாக இருந்தான். 1992 ஆகஸ்டில் யேல்ட்சினுடைய கட்டளையை

ஏற்று ஜியார்ஜியாவுக்கு எதிராக அபாக்சிய மக்கள் படைக் குழுவுக்குத் தலைமையேற்றான். பின்னர் அபாக்சிய சுயாட்சிப் பிரதேச அரசின் இராணுவத் துணை மந்திரியாகவும், அதன் இராணுவத் தலைமைத் தளபதியின் ஆலோசகராகவும் இருந் தான். அப்போதெல்லாம் யேல்ட்சின் கும்பலின் எடுபிடியாக இருந்த இந்த ஷமில் பாசயேவ், இப்போது தனிப்படை கட்டிக் கொண்டு, தனது முன்னாள் ''வளர்ப்புத் தந்தை''க்கே சவால் விடுகிறான்.

செசன்யாவில் நடக்கும் இந்த நாய்ச் சண்டையைப் போன்ற துதான் அதன் மூல மையமான ருசியாவிலும், பிற முன்னாள் சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அரசியல் வரலாறாக உள்ளது. எங்கும் பிரஷ்னேவைட் போலிக் கம்யூனிஸ்டுகளை வீழ்த்தி விட்டு, கோர்பச்சேவ் பாணி போலிக் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்தைப் பிடித்தனர். இந்த இரண்டு பிரிவு போலிக் கம்யூனிஸ்டுகளுக்கிடையிலான அதிகாரத்துக்கான சண் டையைப் பயன்படுத்திக் கொண்டு யேல்ட்சினைப் போன்ற போலி தேசிய, போலி ஜனநாயகவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றினர். இவர்கள் தமது அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு முன்பாகவே அதீத தேசிய வெறியும் அப்பட்ட மான பாசிச சர்வாதிகாரமும் பேசும் ஜெரினோவ்ஸ்கிகள் சவா லாக வளர்ந்துவிட்டனர். அதேசமயம் தோல்வியுற்ற சக்திகள் எதுவுமே முற்றாக அரசியல் அரங்கில் இருந்து அழிந்துவிடவோ, ஒதுங்கிவிடவோ இல்லை. அவை தனித்தனி அரசியல் சக்திக ளாக மட்டுமல்ல, ஆயுதந்தாங்கிய தனித்தனிப் படைகளின் பின்பலத்தோடு இயங்குகின்றன. இவை தேர்தல் மூலமாகவோ, அதிரடி ஆட்சி கவிழ்ப்பு மூலமோ அதிகாரத்தைக் கைப்பற்றும் சதிகளில் ஈடுபட்டிருக்கும் அதேசமயம், கிரிமினல் மாஃபியா கும்பல்கள் மூலம் அந்தந்த நாடுகளின் அதிகாரத்தையும், செல்வா தாரத்தையும் சாத்தியமான அளவு கூறு போட்டுக் கொண்டு விட்டன.

சுருக்கமாகச் சொன்னால், ஏற்கனவே அதிகாரத்தில் இருந்து துரத்தப்பட்ட பல்வேறு வண்ணப் போலிக் கம்யூனிஸ்டுகளான கெனாடி யானயேவ், பாவ்லாவ், ருட்ஸ்கோய், கஸ்புலாடோவ், கோர்பசேவ் மட்டுமல்ல, பாசிச வெறியின் ஜெரினாவ்ஸ்கி என

பல் கும்பல்களும் அதிகாரத்தைக் கைப்பற்றத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். எங்கும் குழப்பமும், கொந்தளிப்பும், நிலையற்ற அரசியல் பதட்டமும் நிலவுவதைப் பயன்படுத்தி முன்னாள் ஆட்சியாளர்களான போலிக்கம்யூனிஸ்டுகளே மீண்டும் ஆட்சியைப் பிடிக்கிறார்கள். ஜனநாயக, தேசியவாத நாடகமாடும் யேல்ட்சின் கும்பலோ தனது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள இந்தப்போக்குக்குத் துணை போகிறது.

சோவியத் ஒன்றியத்தில் இருந்து முதன்முறையாகப் பிரிந்து போன லாட்வியா, எஸ்தோனியா, லித்துவேனியா ஆகிய குடியரசுகளில் பிரிவினைக்குத் தலைமையேற்ற தேசியவாத கட்சிகள் எல்லாம் நிராகரிக்கப்பட்டுவிட்டன. இன்னமும் தேசியவாத நாடகமாடும் பிரஷ்னேவைட்டு போலிக்கம்யூனிஸ்டுகள், புதிய கட்சி நாமகரணம் சூட்டிக் கொண்டு ஆட்சியைக் கைப்பற்றி விட்டனர். 1991 டிசம்பரில் யேல்ட்சினுடன் கூடி சதிசெய்து, சோவியத் ஒன்றியத்தைப் பிளவுபடுத்திய உக்ரெய்னின் அதிபர் லியோனிட் கிராவ்சுக் விரட்டப்பட்டு, பிரஷ்னேவைட்டான லியோனிட் குசுமா அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டு விட்டார். ருசியாவுடன் நெருங்கிய உறவை ஆதரிக்கும் இவருடைய கொள்கைக்கு ஆதரவு திரட்டும் வகையில் செர்னோபில் அணு உலை விபத்துக்கு நட்ட ஈடாக 4000 கோடி டாலர் நிதி அளித்தது யேல்ட்சின் கும்பல். அதே போல பைலோருசிய தனிநாடாகக் காரணமாக இருந்த பிரதமர் வையா செஸ்லாவ் கேபிச் துரத்தப்பட்டு யேல்ட்சின் - பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர் அதிகாரத்துக்கு வந்துள்ளார்.

நகர்னோ-கராபாக் பிராந்தியத்திற்காக அர்மேனியா - அஜர்பைஜானுக்கிடையிலான காகசியப் போரில் யேல்ட்சினின் ருசியா அர்மேனியாவை ஆதரித்தது; துருக்கி ஆதரவு பெற்ற அஜர்பைஜானின் அதிபர் அபுஃபாஸ் எல்சியேயை ஓர் அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் வீழ்த்திவிட்டு பிரஷ்னேவைட்டான கைதார் அலியேவை ஆட்சியில் அமர்த்தியது. அதேபோல், 1992 ஏப்ரலில் ஜியார்ஜியா தேசியவாதி கசேகுர்தியா அரசை வீழ்த்தி கோர்பி கும்பலைச் சேர்ந்த எட்வர்டு செவர்நாட்சேயை அதிகாரத்துக்கு கொண்டு வந்தது. பின்னர் ஜார்ஜியாவில் இருந்து அங்காசியா பிரிந்து போவதற்கு 1992-94 போரில் இரண்டு தரப்பையும் யேல்ட்சினின் ருசிய அரசு ஆதரித்தது.

ஆக, முன்னாள் சோசலிச நாடுகளில் அரசியல் ரீதியில் கம்யூனிசத்தை வீழ்த்த தேசியத்தையும் ஜனநாயகத்தையும் நிலை நாட்டப் போவதாக ஏகாதிபத்தியங்களும் அவற்றின் உள்நாட்டு பங்காளிகளும் அடித்த சவடால்கள் எல்லாம் வேறு மாதிரிதான் முடிந்துள்ளது. அங்கெல்லாம் தூக்கியெறியப்பட்ட போலிக்கம்யூ னிஸ்டுகளும், கிரிமினல் மஃபியா கும்பல்களும்தான் அதிகாரத் தைக் கூறுபோட்டுக் கொண்டுள்ளனர். ருமேனியா, பல்கேரியா, அலபேனியா, போலந்து என்று கிழக்கு ஐரோப்பிய மற்றும் யுரேசிய நாடுகளின் கதையும் இதுதான். பொருளாதார ரீதியில் கூட ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டுப்பங்கு தொழில் கழகங்கள் ஏற்படவில்லை; மாறாக, கிரிமினல் மஃபியா முறையில் ஒருங்க மைக்கப்பட்ட பெரு முதலாளிகளே தோன்றி நிலை பெற்று வருகின்றனர்.

## கம்யூனிச மூலதனத்தில் கடை விரிக்க வந்தவர்கள்

சோவியத் ஒன்றியம் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் "சோசலிச" அமைப்பின் வீழ்ச்சி, அரசின் ஏகபோகக் கட்டுப் பாடு மற்றும் நெறிப்படுத்துதல் அடிப்படையிலான பொருளா தார முறையின் தோல்விதான் என்றும், சுதந்திரமான போட்டி அடிப்படையிலான சந்தைப் பொருளாதாரத்தின் வெற்றிதான் என்றும் மேலை மற்றும் கீழை நாடுகளின் முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர்கள் அத்தனை பேரும் எக்காளமிடுகிறார் கள். சந்தைப் பொருளாதார முறை என்று அவர்கள் குறிப்பிடுவது முதலாளித்துவப் பொருளாதார முறையைத்தான் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த முதலாளித்துவம் வெகுதூரம் வளர்ந்து விட்ட நிலையில் சுதந்திரமான போட்டி அடிப்படையி லான சந்தைப் பொருளாதாரம் என்பதே பித்தலாட்டமான வரையறுப்புதான்; உண்மையில் உலகமெங்கும் ஆதிக்கம் வகிப் பது ஏகபோகப் பொருளாதாரம் தான். குறிப்பாக அரசு ஏகபோகக் கட்டுப்பாட்டிலேயே அனைத்துத் தொழில்களும் பூதாகரமாக வளர்ந்து விட்ட முன்னாள் சோசலிச நாடுகளில் ஏகபோகமில் லாத முதலாளித்தவம் என்பது சாத்தியமே இல்லை; இதெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும்.



சோசலிசம் பழங்கதையாச்சு, வாழ்க்கை பழங்குப்பையாச்சு.

சந்தைப் பொருளாதார முறை என்பது தனியுடமை அதாவது தனியார் மூலதனம் - முதலீடு அடிப்படையிலானது. ஆனால் ''நேற்று வரை'' தொழில்களும் நிலமும் அரசு ஏகபோக உடமையாக இருந்த பொருளாதார அமைப்பில் திடீரென்று தனிவுடமையும் தனியார் மூலதன முதலீடும் எப்படி வந்தது? வரலாற்றில் முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு உருக் கொண்ட போது நிகழ்ந்த ''மூலதனத்தின் ஆதிமுதல் திரட்சி'' பற்றிய உண்மையை முதலாளித்துவப் பொருளாதார வல்லுநர் கள் மூடி மறைக்க முயன்றதைப் போலவே முன்னாள் சோசலிச நாடுகளில் தனிவுடைமையும் தனியார் முதலீட்டிற்கான ''மூலத னத் திரட்சியும்'' எப்படி, எப்போது நிகழ்ந்தது என்பதைப் பற்றி வாய் திறவாமல் இருக்கின்றனர். ''கம்யூனிசம் தோற்றுவிட்டது! முதலாளித்துவம் வென்றுவிட்டது'' என்று அவர்கள் எக்காளமிடு வது உண்மையல்ல என்பதை இந்தக் கேள்விக்கான பதில் நிரூபிக்கிறது. அதற்கு மாறாக, கம்யூனிசம் ஒரு பின்னடைவைச் சந்தித்திருக்கும் அதே சமயம் - அந்தப் பின்னடைவும் இப்போது வந்ததல்ல; அறுபதுகளின் ஆரம்பத்தில் போலிக் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பிடித்த போது நிகழ்ந்தது தான் - முதலாளித்துவ ஏகாதிபத்தியம் மேலும் சிக்கலான ஒரு நெருக்கடிக்குள் புகுந்துள் ளதுதான் உண்மையாகும்.

முன்னாள் சோவியத் ஒன்றியத்திலும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் குருச்சேவ், பின்னர் பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்தவர்கள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியதும், போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள் - பிரமுகர்களும், கட்சிக்கு வெளியிலிருந்த நிர்வாக - தொழில்நுட்ப வல்லுநர்களும் அரசுச் சொத்துக்களாகிய நிலத்தின் மீதும் தொழில் - வர்த்தகத்தின் மீதும் ஆதிக்கத்தை நிலைநாட்டினர்; ஊழல்கள் அதிகார முறைகேடுகள் மூலம் கோடி கோடியாகக் கொள்ளையடித்து அதிகார வர்க்க முதலாளிகளாயினர். இப்படி ஒரு புதிய முதலாளி வர்க்கம் அங்கெல்லாம் செழித்து வளர்கிறது என்பதை உலகம் முழுவதுமுள்ள மார்க்சிய - லெனினிய - மாவோயிச புரட்சியாளர்கள் அம்பலப்படுத்தினர். இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் போன்றவர்கள் மட்டுமல்ல, ஏகாதிபத்தியவாதிகளும் கூட அது தவறான கணிப்பு என்றும் அந்நாடுகள் தொடர்ந்து சோசலிச நாடுகளாகவே நீடிக்கின்றன என்றும் வாதிட்டனர்.

எண்பதுகளின் இறுதியில் வந்த கோர்பச்சேவ் கும்பல், மறுசீரமைப்பு என்கிற பெயரில் அதிகார வர்க்க முதலாளிகளையே மேற்கத்திய பாணியிலான அப்பட்டமான, சட்டபூர்வ முதலாளிகளாக மாற்றும் வேலையில் இறங்கியது. அதையே படிப்படியான மாற்றமாகச் செய்வதற்கு பொருளாதார அமைப்பில் சில புதிய நடவடிக்கைகளை எடுத்தது. உற்பத்தி மற்றும் விற்பனை மீதான எல்லாக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு, அனைவருக்கும் கல்வி, வேலை வாய்ப்பு, உணவு, உடை, இருப்பிட வசதி தருவது என்கிற அரசின் பொறுப்பு எல்லாம் முற்றாக கைவிடப்பட்டு திறந்த சந்தைக்கு விடப்பட்டது. நுகர்வோரின் தேவைக்கேற்ப இறக்குமதி செய்தோ, உற்பத்தி செய்தோ விற்பதற்கான உரிமை தனியாருக்கு வழங்கப்பட்டது. நலிவடைந்த தொழில்கள் எனக் கணிக்கப்பட்டவைகளில் இருந்து தொழிலாளர்கள் தூக்கியெறியப்பட்டனர்; இலாப விகிதத்தையும் உற்பத்தித் திறனையும் கூட்டுவது என்ற பெயரில் மேலும் பல தொழில்களில் ஆட்குறைப்பு நடந்தது; அரசுடைமையாக இருந்த தொழில்கள் பங்குகளாகப் பிரித்து விற்கப்பட்டன. சோசலிச முகமூடி தரித்திருந்த கோர்பி கும்பல் ஒவ்வொரு ருஷ்யக் குடிமகனுக்கும் பத்தாயிரம் ரூபாய்கள் மதிப்புடைய பங்குகள் வீதம் 6000 முதல் 7000 நடுத்தர, பெரிய தொழில்களுக்கான பங்குகள் விநியோகித்தது. இந்தத்

தொழில்களை நடத்துவதில் பங்குதாரர்கள் உரிமை பெறவும், தனித்தனி இலாபமீட்டவும் இதனால் வாய்ப்பிருப்பதாக நாடக மாடியது. பங்கு முதலீடு என்பதே ஏகபோக முதலாளித்துவம் மூலதனம் திரட்டி மேலும் கொள்ளையிடுவதற்கான வழிமுறை தான் என்பதை நாம் அறிவோம். ஆனால் இதிலும் அங்கு நடந்தது என்ன?

## ஜனநாயகச் சிற்பிகளின் சாதனை: விபச்சாரம் சூதாட்டம், வேலையின்மை

திடீரென்று பல ஆயிரம் மடங்கு பண வீக்கத்தால் விலைவாசி வீங்கிப் போனதில் வேறு பிற நுகர்பொருட்களை மட்டுமல்ல; உணவு, உடைக்கான தேவைகளை வாங்கவும் முடியாமல் பெரும்பாலான மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் தள்ளப்பட்டனர். பலர் பிச்சையெடுக்கவும், குளிரில் விறைத்துப் போகவும், வீடு வாசல் இல்லாமல் தெருவில் தவிக்கவும், பெண்களில் பலர் விபச்சாரத்தில் ஈடுபடவும், திடகாத்திரமான இளைஞர்கள் தனியார் குண்டர் படையிலோ, கிரிமினல் மாஃபியா கும்பலிலோ சேரவும் செய்தனர். இந்த நிலையில் பங்குப் பத்திரங்களை வைத்துக் கொண்டு நாக்குத் தான் வழிக்க முடியும்!

அதேசமயம், ஒரு சிறு பிரிவினர் மட்டும் மிகவும் ஆடம்பரமான, அருவெறுக்கத்தக்க - வக்கிரமான, பகட்டான, உல்லாச - ஊதாரி வாழ்க்கையில் வெளிப்படையாகவே மூழ்கித் திளைத்தனர். நடுத்தர, மேல்தட்டு நடுத்தர கும்பல்களின் கனவாகிய குளுகுளு இயந்திரங்கள், சலவை இயந்திரங்கள், வீடியோ வசதி கொண்ட வானொலிகள், உள்நாட்டுக்கார்கள், வசதியான தனித்தனி அடுக்குமாடித்தளங்கள் போன்றவை அல்ல. மெர்சிடஸ், கெடிலாக், பி.எம்.டபிள்யூ போன்ற இறக்குமதி செய்யப்பட்ட கார்கள், அவற்றுக்கு முன்னும் பின்னும், பாதுகாப்புக்கு இயந்திரத் துப்பாக்கிகள் ஏந்திய தனியார் படைகள் - மெய்க்காப்பாளர்கள்; இத்தாலியின் மிலன் அல்லது பாரிஸ் மாநகரில் இருந்து இறக்குமதியான அர்மாணி மற்றும் வெர்சேஸ் வகை ஆடம்பர சீமான்களின் உடைகள்; சீமாட்டிகள் அணியும் வைர நகைகள், ஆடம்பர பங்களாக்கள்; ஐந்து நட்சத்திர விடுதிகள் - சூதாட்ட மாளிகைகளில் நிரந்தர ஆடம்பர அறைகள்; ஓய்வு நாட்களைக்

கழிக்க பிரான்சு, இத்தாலி, இங்கிலாந்து, ஸ்பெயின் தீவுகளில் உல்லாச மாளிகைகள், தமது வாரிசுகள் தங்கிப் படிக்க ஜெர்மனியில் பான், இங்கிலாந்தில் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு, அமெரிக்காவில் கலிபோர்னியா, பிரான்சில் பாரிசு பல்கலைக்கழகங்களுக்கு அருகே சொந்த மாளிகைகள், சொந்தமாக விமானங்கள் என்று ஒரு சில குடும்பங்கள் வாங்கிக் குவித்தன. திருமணம், பிறந்தநாள், தொழில் - வர்த்தக நிறுவன ஆண்டு விழாக்கள் என்று ஆடம்பர களிவெறியாட்டங்கள் நடத்துகின்றனர். அவற்றில் மிக உயர்ந்த இறக்குமதி மதுக்களும், பல சுவை உணவுகளும், ஆபாச - வக்கிர நடனங்களும் தவறாது இடம் பெறுகின்றன.

முன்னாள் சோசலிச நாடுகளின் புதிய பணக்காரர்களான இவர்களைக் கழிசடைச் செல்வந்தர்கள் என்று ஏகாதிபத்திய ஏடுகளே சித்தரிக்கின்றன. இவர்கள்தான் அந்நாடுகளில் முக்கியத் தொழில்கள், வர்த்தக வியாபாரங்கள், பண்ணைகளை இப்போது உடமையாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் பலர் அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய ஏகபோக முதலாளிகளுக்கு இணையான செல்வந்தர்களாக உள்ளார்கள். யார் இவர்கள்? திடீரென்று இவர்களிடம் மட்டும் எப்படி இவ்வளவு செல்வம் குவிந்தது? இவர்கள் ருசியா முதலிய நாடுகளின் ராக்ஃபெல்லர்கள், ஃபோர்டுகள், கார்னேஜிகள், மார்கான்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

இவர்களில் 61 சதவீதத்தினர் குருச்சேவ், பிரஷ்னேவ், கோர்பச்சேவ் ஆட்சிக் காலத்தில் இரகசியமான கிரிமினல் முறைகளில் அரசுடமை தொழில்கள், வர்த்தக - வியாபாரங்கள், பண்ணைகளிலேயே ஏராளமாகக் கொள்ளையிட்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பதுக்கி வைத்த போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள் - பிரமுகர்களும், நிர்வாக - தொழில் நுட்ப வல்லுநர்களுமாவர். தாராளமயமாக்குதல், தனியார்மயமாக்குதலைப் பயன்படுத்திக் கொண்டு, முன்பு சோசலிச தொழில், வர்த்தக, பண்ணை நிறுவனங்களாக இருந்து பின்னர் அதிகார வர்க்க முதலாளித்துவ நிறுவனங்களாக மாறியவற்றை அப்படியே தமது சொந்த உடமைகளாகக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவர்களோடு புதிதாக மேலை ஏகாதிபத்தியத்தின் பினாமி, தரகு முதலாளிகள், பங்காளிகளாக வளர்பவர்களுக்கு தான் இந்த கழிசடைச் செல்வந்த வர்க்கமாகியுள்ளனர்.

விளாதிமிர் குசிங்கி என்பவன் இன்று ருசியாவிலேயே மிகப் பெரியதான ''மோஸ்ட் வங்கி''யின் முதலாளி. இவன், இப்போதைய மாஸ்கோ நகர மேயரும், பெரிய அதிகாரத் தரகனும், அடுத்த ஆண்டு அதிபர் தேர்தலில் யேல்ட்சினை எதிர்த்துப் போட்டியிட உள்ள வேட்பாளனுமாகிய யூரி லுஸ்கோ வின் நெருங்கிய பங்காளியாவான். நாடக இயக்குநராக இருந்த இவன் ஆறாண்டுகளுக்கு முன்பு ஒரு தொழில் ஆலோசனைக் கூட்டுறவு அமைப்பை நிறுவினான். 1991-இல் ''மோஸ்ட் வங்கி''யை மாஸ்கோ மாநகராட்சி மற்றும் கட்சி நிதியைக் கொண்டு தொடங்கினான். பணவீக்கம் பூதாகரமாக வெடித்த தைப் பயன்படுத்திக் கொண்டு குறுகிய காலத்தில் கொள்ளை லாபமடித்தான். மாஸ்கோ நகர மேயருடன் ஏற்படுத்திக் கொண் டுள்ள கூட்டைப் பயன்படுத்திக் கொண்டு வீடு, வீட்டுமனைத் தொழிலில் ஈடுபட்டு அரசு நிலங்கள் - சொத்துக்களைச் சூறையாடி மேலும் கொழுத்தான். முன்னாள் கே.ஜி.பி. உளவுப் படை அதிகாரிகளின் தலைமையில் தனிப்படை வைத்திருப்ப தோடு, இரகசிய கிரிமினல் மாஃபியா உலகுடன் நெருங்கிய உறவும் வைத்துள்ளான்.

கோர்பி ஆட்சியின் இறுதிக் காலப் பிரதமராக இருந்தவன், வாலண்டின் பாவலோவ்; இவன் 1991 ஆகஸ்டில் நடந்து தோல்வியுற்ற அதிரடி ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட சதிகாரன் என்பதால் ஒன்றரை ஆண்டு சிறையிலடைக்கப்பட்டான். சதி வழக்குக் கைவிடப்பட்டு விடுதலையாகி மூன்றாண்டுகளுக்குள், இப்போது வங்கி, வர்த்தகம், விவசாயப் பண்ணை, ஆலோச னைக் குழுமம் முதலிய ஐந்து நிறுவனங்களுக்குச் சொந்தமான வன். பாவ்லோவைப் பொருத்தவரை சோசலிசத்தில் இருந்து முதலாளித்துவத்துக்கு மாறிக் கொள்வதில் பிரச்சினையே கிடை யாது. ''தேவையானது எல்லாம் போதிய அறிவும் தகுந்த மேலிடத் தொடர்புகளும்தான்'' என்கிறான். புதிய வர்த்தக உறவுகளை எப்படி ஏற்படுத்திக் கொள்வது என்று ஆலோசனை வழங்குவதுதான் அவனது பிரதான தொழில். சோவியத் ஒன்றி யம் பிளவுபட்டு, சிதைந்து போன பிறகு தனித்தனியாகிப்போன குடியரசுகள் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் தொழிலகங்களுக்கிடையிலான தொழில் - வர்த்தக உறவு

அறுபட்டுப் போனது. மூலப் பொருட்களைப் பெறவும், உற்பத்திப் பொருட்களைப் விநியோகிக்கவும் வழியில்லாமல் போனது. இவற்றுக்கிடையிலான புது உறவு, ஒப்பந்தங்கள் போடுவதில், வாங்கவும் விற்கவுமான சந்தையில் முன்னாள் போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள், பிரமுகர்கள், தொழில் - வர்த்தக வல்லுநர்கள் இடைத்தரகர்களாக மாறினர். ''அவற்றுக்கிடையிலான உறவு, ஒப்பந்தத்தை, உதாரணமாக உக்ரைனிடம் இருந்து எதையும் வாங்குவது அல்லது வற்பதை துருக்மேனிஸ்தானுக்கோ, கஜகஸ்தானுக்கோ மாற்றுவது எனக்கு ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை'' என்கிறான் பாவ்லோவ். இதைபோலத்தான் முன்னாள் சோசலிச நாடுகள், இந்தியா போன்ற நாடுகளுடன் கொண்டிருந்த தொழில் - வர்த்தக ஒப்பந்தங்கள், இப்போது அந்நாடுகள் மேலை ஏகாதிபத்தியங்களுடன் போடும் ஒப்பந்த உறவுகளிலும் இவர்கள் இடைத்தரகு வேலை செய்து கொள்ளையடிக்கின்றனர்.

## தேவையில்லையாம் வர்க்க போராட்டம்
## செழிக்கிறது வர்த்தகச் சூதாட்டம்

மேலிடத் தொடர்பு ஒவ்வொரு புதுத் தொழிலதிபருக்கும் வசதியான கருவியாக இருக்கிறது. அதாவது அரசு நிதியைப் பயன்படுத்தித் தொழில் நடத்த முடிகிறது. ''என்னுடைய சகபாடிகள் பலரும் இதைச் செய்கின்றனர். ஏழைகளுக்கு வீட்டு வசதிக்கென ஒதுக்கப்படும் தொகையில் பல கோடி ரூபிள்களைப் பெற்று அடுக்குமாடி வீடு கட்டும் திட்டத்தில் முதலீடு செய்தால் 100 முதல் 120 சதவீதம் வரை ஆண்டு லாபம் ஈட்டலாம். அதற்குத் தேவை அரசு - மேலிடத் தொடர்பு மட்டும்தான்'' என்கிறார், பாவ்லோவ். இன்னொரு விதம் அரசுப் பொருட்களை விற்பதும், அரசுக்கே வழங்குவதும், அதாவது அரசுத் தலைவர்கள், அதிகாரிகளே பினாமி பெயரிலோ, கூட்டுத்துறை பெயரிலோ அரசுடன் ஒப்பந்தங்கள் போட்டுக் கொண்டு கழிவுப் பொருட்கள், துணைப் பொருட்கள் என்கிற முத்திரை குத்தி அதாவது தார், மண்ணெண்ணெய் என்று சொல்லி உயர் ரகப் பொருட்களான பெட்ரோல், டீசல், மசகு எண்ணெய் கடத்துவது; வீணான மரத்துண்டுகள் என்று சொல்லி நல்ல உயர்ரக மரங்கள் போன்றவற்றை வெளிநாடுகளுக்குக் கடத்தி கள்ளச் சந்தையில் விற்று கொள்ளை

யடிக்கின்றனர். ''வேறெப்படி அமெரிக்கா போன்ற நாடுகளில் ருசியப் பணம் குவிகிறது? ரொக்கமாகவா எடுத்துச் செல்ல முடியும் அல்லது அரசு வங்கிதான் அனுமதி தருமா?'' என்று கேட்கிறான் பாவ்லோவ்.

இன்னொரு வகைக்கு எடுத்துக்காட்டான புது முதலாளி ஒலக் போய்கோ, ருசிய ஜனநாயக கட்சியின் துணைத் தலைவன்; வர்த்தகம், வங்கி, வீடு - வீட்டு மனை, கணிப்பொறி, மின்னணுக் கருவிகள் போன்ற தொழில்கள் செய்யும் 10 கம்பெனிகளுக்கு அதிபர். எப்போதும் இறக்குமதி ஆடையான ''ஆர்மாணி'', ''ரோல்ஸ்ராய்ஸ்'' கார் என்று பகட்டாக வாழ்கிறான். ''யாருமே, நேர்வழியில் வளர்ந்தவர்கள் கிடையாது. நானும் சட்டத்தின் சந்து பொந்துகளைக் கொண்டு, இருண்ட உலக வழிகளில்தான் முன்னேறியவன்'' என்கிறான் போய்கோ. பலவகைக் கடத்தல் பொருட்களை இறக்குமதி செய்து அரசு அதிகாரிகளுக்கு விற்றே முதலீடு திரட்டியவன். இப்படியே வளர்ந்து பெரிய தொழிலபதி பர் ஆனதோடு இப்போது அரசியலிலும் முக்கியப் புள்ளியாக விளங்குகிறான்.

இந்த வகையில் இன்னொருவன் சேர்கெய் மாவ்ரோடி. வரிமோசடிக்காக கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட வன். அதாவது நம்ம ஊர் அர்சத் மேத்தா போன்றவன். ஒரே மாதத்தில் வெளியே வந்து நாடாளுமன்றத்துக்குப் போட்டியிட்டு வெற்றியும் பெற்றுவிட்டான். பல கோடி ரூபிளுக்கு அதிபதி யான இவனது எம்.எம்.எம். என்ற பங்குச் சந்தைக் கம்பெனி திடீரென்று திவாலாகி, பங்குத் தொகைகள் திருப்பித் தர முடியாமற் போனான். அதாவது பல கோடி பங்குகளை விற்றுவிட்டு திடீரென்று திவாலென்று அறிவித்து மோசடி செய்தான். இவன் இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் என்ற தகுதியை வைத்து நடவடிக்கை ஏதுமின்றித் தப்பித்துக் கொண் டான். ''இது எனக்குச் சாதாரணம்தான்; சோவியத் காலத்திலேயே 'வீடியோக்கள்' பிடித்து இரகசியமாக சம்பாதித்தேன். எண்பதுக ளிலேயே கம்ப்யூட்டர் தொழிலுக்காக ஒரு அரசு நிறுவனத் தொகையைக் கையாடல் செய்ய போலிக் கையெழுத்துப் போட்டு சிறையிலடைக்கப்பட்டேன்; ஆனால் அந்நிறுவன காசாளர் மீது பழி போட்டுத் தப்பித்துக் கொண்டேன்'' என்று



மாஃபியா: மறுசீரமைப்பின் விளைச்சல்.

இப்போது பெருமையுடன் பத்திரிகைக்குப் போட்டி கொடுக்கிறான், மாவ்ரோடி.

மேலும் ஒரு வகைப் புதுப் பணக்காரன், திமித்ரி யாகூபோவ்ஸ்கி. இவனுடைய தனிச் சிறப்பான தொழில், சோவியத் ஒன்றியத்தின் இறுதி நாட்களில் ஆட்சி புரிந்த போலிக் கம்யூனிஸ்டு தலைவர்கள், இராணுவத் தளபதிகள் மேற்கத்திய நாடுகளுடன் ஒப்பந்தங்கள் பேரங்கள் நடத்துவதற்கான சட்டத்தின் சந்து பொந்துகளைக் காட்டி லஞ்ச ஊழல் புரிவதற்கான ஆலோசனைகள் தருவது. எடுத்துக்காட்டாக, முன்னாள் கிழக்கு ஜெர்மனியில் இருந்து சோவியத் இராணுவம் வெளியேறும் போது கைவிடப்பட்ட ஆயுதத் தளவாடங்களைப் பேரம் பேசி மேற்கு ஜெர்மனியின் இராணுவ ஆயுத உற்பத்தி முதலாளிகளிடம் விற்பதில் ருசியத் தளபதிகள், தலைவர்களுக்குத் தரகனாக செயல்பட்டான். இதனால் பல கோடி ரூபிள்கள் தரகுத் தொகையாகப் பெற்றான். அவ்வளவையும் கொண்டு போய் கனடாவில் முதலீடு செய்து, சொத்துக்கள் வாங்கி மனைவி - குழந்தைகளைக் குடியமர்த்தினான். கோர்பி காலக் குழப்பங்கள் காரணமாக வெளிநாடுகளில் சுற்றினான். கனடாவில் இருந்த போது ருசியக் கம்யூனிஸ்டு கட்சி நிதியைக் களவாடியதாக

போலீசு தேடியது; அதற்குள் யேல்ட்சின் ஆட்சி உறுதிப்பட்ட தைத் தொடர்ந்து ருசியா திரும்பினான். யேல்ட்சின் கும்பலு டைய அரசியல் எதிரிகளின் மீதான லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள் பற்றிய ஆதாரங்களைத் திரட்டுவதற்குப் பயன்ப டுத்தப்பட்டான். இப்போது குசிங்கி உட்பட பல பெரும் ஏகபோக முதலாளிகளின் சட்ட ஆலோசகராக இருக்கிறான். அதாவது பகல் கொள்ளையர்களின் மூளையாக இருக்கிறான். இதன் மூலமாகவே இவனும் பெரும் முதலாளியாகிவிட்டான்.

இவர்கள்தான் ருசியா மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ''கம்யூனிசத்தை வீழ்த்தி முதலாளித்துவத்தை நிலை நாட்டியுள்ள'' ஆளும் வர்க்கத்தின் வகைமாதிரிகள். இவர்கள் கொள்ளையடித்த பணத்தையும் தமது தாய்நாடுகளின் முன்னேற் றத்துக்கும் முதலீடு செய்கிறார்களா? இல்லை வெளிநாடுகளுக் குக் கடத்திக் குவிக்கின்றனரா? என்பதுதான் முக்கியம். ''முதலில் வெளிநாடுகளில் தான் குவித்தனர். இப்போது பங்குச் சந்தை முதலீடாகத் திரும்புகிறது'' என்று கூறுகிறது ஒரு அமெரிக்க ஏடு. ''முக்கியமானது என்னவென்றால் பணம் யாருடைய கரங்களிலாவது இருக்கிறது. ஒழுக்கம், தார்மீகம் என்று நீங்கள் கேள்விகள் எழுப்பலாம். ஆனால் பொருளாதாரத்தைப் பொருந்த வரை அது ஒரு பொருட்டே இல்லை'' என்று ஒரு ருசிய ''தாராளவாத''ஏடு.

முன்னாள் லெனின்கிராடு நகரில் உள்ள ருசிய அறிவியல் கழகத்தின் சமூகவியல் நிறுவன ஆய்வாளர் வியாசேஸ் லேவ் அஃப்சனயேவ் என்பவர் 1989-92-ஆம் ஆண்டுகளில் நடந்த பெருமளவிலான லஞ்ச - ஊழல், அதிகார முறைகேடுகள் மற்றும் நாணயச் சட்ட விதிமீறல் போன்றவை மூலம் கொள்ளை யடிப்பது என்கிற பொருளாதாரக் குற்றங்களை எல்லாம் தொகுத் திருக்கிறார். மாஸ்கோவிலுள்ள அறிவியல் கழகத்தின் சர்வதேச அரசியல் பொருளாதார ஆய்வு நிறுவன இயக்குநர் ஸ்வெட் லானா, பி. கிளிங்கினா என்பவர்''தனியார்மயமாக்கலை எப்படி அமைப்பு ரீதியில் திரண்ட குற்றவாளிகள் கைப்பற்றி கடத்திக் கொண்டு போய்விட்டார்கள்'' என்று ஆய்வறிக்கை தயாரித்துள் ளார்.

''1993 மத்தியில் உள்துறை அமைச்சகம் செய்த கணிப்பின் படி 40,000 தொழில் நிறுவனங்கள் அமைப்பாகத் திரண்டுள்ள

கிரிமினல் கும்பல்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. 70 முதல் 80 சதவீதமான தனியார் மற்றும் தனியார் நிறுவனங்கள், வங்கிகள், கிரிமினல் கும்பல்கள், லஞ்ச ஊழல் அதிகாரிகள், முறைகேடாகக் கொள்ளையடிப்பவர்களுக்கு படியளக்கின்றன. தனியார்மயமாக்கல் என்ற பெயர் இன்னமும் நீடித்தாலும் அந்நிறுவனங்களின் இயக்குநர்கள் கம்பெனி பங்குகளைச் சுருட்டிக் கொண்டுள்ளனர்'' என்கின்றனர் அந்த ஆய்வாளர்கள்.

''ஊழல் அதிகாரிகளின் ஒரு வலைப்பின்னல் எண்ணெய், உலோகங்கள், மரம் மற்றும் பிற பொருட்களை வெளிநாடுகளுக்குக் கடத்துவதால் ஆண்டுதோறும் பெரும் இலாபம் சம்பாதிக்கிறார்கள்'' என்கிறார் யேல்ட்சின் அரசுக்கான சுவீடன் பொருளாதார நிபுணர் ஆண்டர்ஸ் அஸ்லுண்ட். ''ருசியாவின் மூன்றிலொரு பங்கு உலோக ஏற்றுமதியும் ஐந்திலொரு பங்கு எண்ணெய் ஏற்றுமதியும் சட்டவிரோத, இரகசிய வழிகளிலேயே கடத்தப்படுகின்றன'' என்று மேலும் அவர் சொல்கிறார்.

மேற்கண்டவாறெல்லாம் புத்துருவாக்கம் பெற்று ஆளும் வர்க்கமாக மாறும் அதே நபர்களில் பலரும் அரசியலிலும் நேரடியாக ஈடுபட்டு இப்போது தேர்தல்கள் மூலம் மீண்டும் பதவிக்கு வருகிறார்கள். இதைத்தான் ''மீண்டும் கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள் ஆட்சியைப் பிடிக்கிறார்கள்'' என்று சி.பி.ஐ; சி.பி.எம் மட்டுமல்ல, சச்சிதானந்தம் போன்ற இந்தியப் ''புதிய போலிகளும்'' கூட வரவேற்கின்றனர்.

எந்த நபர்களை ஸ்டாலினிஸ்டுகள், ஜனநாயகம் - சுதந்திரத்தின் எதிரிகள் என்றும், அவர்களுடைய ஆட்சி வீழ்த்தப்பட்டது என்றும் மேலை ஏகாதிபத்தியங்கள் எக்காளமிட்டனவோ, அதே நபர்கள்தான் அவை விரும்பும் சுதந்திர போட்டி சந்தைப் பொருளாதாரத்தில் தமது பங்காளிகளாக வந்து நிற்கக் காண்கின்றன. இதைப் பற்றி அவை என்ன சொல்கின்றன? ''மாஸ்கோவின் பகற் கொள்ளையர்களது கழிசடைத்தனங்கள் மாறும்; உண்மை தான்! புதுப்பணம் - பகட்டுடைய நிறைய கேலிக்குரிய, அருவெறுக்கத்தக்க பாத்திரங்கள் இன்று இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள் அடுத்த கட்டமாக கொஞ்சம் அறிவும், நல்ல சிந்தனையும், நடத்தையும் கற்றுக் கொள்வார்கள். முக்கியமானது என்னவென்றால் மக்களுக்கு சுதந்திரம் கிடைத்திருக்கிறது '' என்று எல்லா ஏகாதிபத்தியங்களுக்கும் நம்பிக்கையூட்டும்

வகையில் சொல்கிறார், போய்கோ. ஆம்; சுதந்திரம் மக்களுக் கல்ல, ஏகாதிபத்தியக் கொள்ளைக்கு; அதுபோதும் அவற்றுக்கு!

## முந்நாள் சோவியத்தும் இந்நாள் கேலிக் கூத்தும்

ஸ்டாலின் காலத்திய சோவியத் ஒன்றியத்துக்கும், மாவோ காலத்திய செஞ்சீனத்திற்கும் பயணம் செய்து வந்த மேலை மற்றும் கீழை நாடுகளின் அறிஞர்கள், சமூக சேவையாளர்கள், ஜனநாயக அரசியல்வாதிகள், பத்திரிகையாளர்கள் அனைவரும் பிரமித்துப் போய் மூன்று முக்கிய அம்சங்களைத் தவறாது குறிப்பிட்டனர்.

★ *கம்யூனிச சோசலிச நாடுகளில் விபச்சாரம் முற்றாக ஒழிக்கப் பட்டு விட்டது. பெண்கள் அனைவருக்கும் பொருளாதார சுதந்திரம், சுயசார்பைப் பெறும் வகையில் வேலை வாய்ப்பு கள் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆண் பெண்களின் சம உரிமையைப் போற்றும் ஒழுக்கம், பண்பாடு போற்றப்படுகிறது. குடும்ப உறவுகளிலும், குழந்தைகளைப் பேணுவதிலும் புதிய, வற்வேற்கத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.*

★ *கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கள்ளச் சந்தை போன்ற சமூக விரோத பொருளாதாரக் குற்றங்கள் அற்ப அளவுக்குக் குறைந்து விட்டன. அவ்வளவு பெரிய நாடுகளில் குற்றங்க ளுக்காகத் தண்டிக்கப்பட்டு சிறையில் இருப்பவர்கள் என் ணிக்கை மிக மிகக் குறைவுதான். வீடுகளையோ, கடைக ளையோ அங்கே பூட்டிக் கொண்டு செல்வதில்லை. காரணம், அங்கே திருட்டு பயம் கிடையாது. உணவு, உடை, இருப்பிடம், வேலை வாய்ப்பு ஆகியவை அனைவருக்கும் கிடைப்பதால் அங்கே கிரிமினல் குற்றங்களுக்கான அடிப்படை இல்லாமல் போய் விட்டது.*

★ *ஒரு குறுகிய காலத்திலேயே விவசாயம், தொழில், அறிவியல் - தொழில் நுட்பம், மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வது ஆகியவற்றில் பிரமிக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. உழைப்பும் சமூக சேவையும் மதிக்கப்பட்டன; கல்வி - கலாச்சாரம், நாகரிகம், நல்லொழுக்கம் ஆகியவற்றி*

லும் ஒரு புதிய வளர்ச்சி எட்டப்பட்டது. உலக மக்களுக்கும் நாடுகளுக்கும் நல்ல முன்னுதாரணமாகத் திகழ்ந்தன, சோசலிச நாடுகள்.

ஆனால் ஏகாதிபத்திய சித்தாந்தவாதிகள் இதை ஏற்க வில்லை. அந்நாடுகளில் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள், பிரமுகர்கள் அடங்கிய பெரிய சர்வாதிகாரக் கும்பலின் ஆதிக்கம் - சுரண்டல் நிலவுகிறது; முன்னேற்றம் என்பதெல்லாம் போலி யான புள்ளி விவரங்கள் அடிப்படையிலானவை; தலைவர்கள், பிரமுகர்கள் இரகசியமான, ஆடம்பர வக்கிர வாழ்வு வாழ்கின்ற னர். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பண்ணைகள், மாளிகை கள், முதலீடுகள் என்று சொத்துச் சேர்த்துள்ளனர். அதேசமயம் தனி மனித சுதந்திரம் - ஜனநாயகம் பறிக்கப்பட்டு சித்திரவதை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளார்கள் என்று வதந்திகளைப் பரப்பி வந்தனர். சோல்செனித்ஸ்சென், வாங்மிங் போன்ற கைக்கூலிகள், துரோகிகள் இத்தகைய அவதூறுகளுக்குப் பயன்ப டுத்தப்பட்டனர்.



யெல்ட்சின் கும்பலுக்கு ஏகாதிபத்திய எலும்புத்துண்டு

ரசிய மக்களுக்கு ஜனநாயக ரொட்டித்துண்டு.

ஏகாதிபத்திய நிறுவனங்களின் சக்தி வாய்ந்த மக்கள் பெருந் திரள் செய்தி தொடர்புச் சாதனங்களால் இந்த அவதூறுகள் தொடர்ந்து வருகின்றன. ஆனால் முன்னாள் சோசலிச நாடுகளில் முதலாளித்துவம் முற்றாக நிறுவப்பட்ட பிறகு எழுந்துள்ள உண்மை நிலை என்ன? உழைக்கும் மக்கள் கூலி அடிமைகளாக வும் பெண்கள் சமூக அடிமைகளாகவும் வெகு விரைவிலேயே மாற்றப்பட்டனர். நகரங்களில் எல்லாம் ''காசினோ'' எனப்படும் சூதாட்ட விடுதிகள், உழைக்கும் மக்கள் ஓய்வுக்காக நிர்மாணிக் கப்பட்டிருந்த சுற்றுலாத் தளங்களும், பழம் அரண்மனைகளும், நவீன மாளிகைகளும் நட்சத்திர விடுதிகளாக - காமக் களிவெறி யாட்ட அரங்குகளாகவும் மாறிவிட்டன. விபச்சார, கிரிமினல் மஃபியா கும்பல்களின் ஆதிக்கமும் எங்கும் பரவி விட்டன. மேற்குலகைப் போலவே முன்னாள் சோலிச நாடுகள் ஒழுக்க மும், பண்பாடும் மிக்க நாகரிகமும் உள்ள மனிதர்கள் வாழத் தகுதியற்றவையாக மாறி விட்டன.

அமெரிக்காவின் வாஷிங்டன் நகரில் உள்ள பல்கலைக் கழக ''நீதி, சட்டம், சமூகம்'' என்ற துறையின் பேராசிரியர் லூயிஸ் ஐ. ஷெல்லி ''ஜனநாயக மயம்'' என்ற ரஷ்யப் பத்திரிகையின் ஆசிரியர். இவர் சொல்கிறார்: ''முன்னாள் சோவியத் ஒன்றியத் தின் புதிய குடியரசுகள் அனைத்திலும் அரசாங்கங்களின் எல்லா மட்டங்களிலும் அமைப்பு ரீதியில் திரண்டுள்ள குற்றக் கும்பல் கள் ஊடுருவி விட்டன. இவ்வளவு தூரம் சமூகத்தில் அவை பரவிவிட்டதால் இனிமேலும் அவை சாதாரண குற்றப் பிரச்சி னையாகக் கருத முடியாது. சோவியத் ஒன்றியம் சிதைந்து உருவான புது அரசுகளின் எதிர்கால வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றும் ஒரு விசயமாகச் சொல்வ துதான் சரியாகும். மேலும், ஒரு சர்வதேச மற்றும் உள்நாட்டு விசயம் என்கிற முறையில் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களின் விளைவாக எழுந்துள்ள பாதிப்புகள் ஏற்கனவே கிழக்கு ஐரோப்பிய வட்டங்களில் மட்டுமல்ல; மேற்கு ஐரோப் பாவிலும் அமெரிக்காவிலும் ஒரு பகுதி ஆசியாவிலும் கூடத் தெரிகிறது.''

''அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்கள் அரசின் செயல்பாடுகள் பலவற்றையும் எடுத்துக் கொண்டு விட்டன.

தொழில் வர்த்தகங்களுக்குப் பாதுகாப்பு, குடி மக்களுக்கு வேலை வாய்ப்பு, தகராறுகளைத் தீர்த்து வைப்பது போன்றவை அரசு செய்ய வேண்டிய சேவைகள் - பணிகள் என்று குடிகள் எதிர்பார்க்கிறார்கள்; ஆனால் அவற்றை ரசிய மற்றும் பிற 'காமன்வெல்த்' நாடுகளின் ஆளும் மேட்டுக்குடிக்காக முன்னாள் கட்சி செல்லப்பிள்ளைகளும் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களும் அடங்கிய கூட்டணி இப்போது தருகிறது. அரசாங் கத்தின் சட்ட அமலாக்கப் படைகளின் இடத்தை அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்படும் தனியார் பாதுகாப்புப் படைகள் பிடித்துக் கொண்டு விட்டன. ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சட்ட அமலாக்கப் படையினர் முறையான ஒழுங்கு விதிகள் எதுவும் இல்லாமல் செயல்பட்டு வருகின்றனர்'' என்று கடந்த ஆண்டு கணித்தார்.

''உலக ஆலோசனை சேவைகள்'' என்ற அமைப்பின் தலைவர் ரெண்ஸ்லேயர் டபிள்யூ. லி-இன் கணிப்புப்படி, ஒரு இலட்சத்துக்கும் மேலான நபர்களைக் கொண்ட 5500 கிரிமினல் கும்பல்கள் ருசியாவில் மட்டும் செயல்படுகின்றன; அவை மாமூல் வசூலிப்பது, போதை மருந்து கடத்தல் - வியாபாரம், வங்கி மோசடி, ஆயுதக் கடத்தல் வியாபாரம், எண்ணெய் - உலோகங்கள் கள்ளக் கடத்தல் இவற்றை விட முக்கியமாக அணு உலைகளுக்குத் தேவையான மூலக்கூறுகளும் தளவாடங்களும் கடத்தல் போன்ற கடும் குற்றங்கள் புரிந்து வருகின்றனர். இவை சராசரி 70 முதல் 300 பேர் வரையிலான உறுப்பினர்களைக் கொண்டவை. தமக்குள் ஒரு கூட்டமைப்பையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளன.

அமெரிக்கா செனட் குழு ஓராண்டுக்கு முன்பு நடத்திய விசாரணையின் போது ருசிய முதல் துணை உள்துறை அமைச்சர் மிகையில் யேகோரோவ் அளித்த விவரத்தின்படி, 150 முதல் 200 ருசியக் கிரிமினல் கும்பல்கள் சர்வதேசத் தொடர்புகளைக் கொண்டுள்ளன. அவை முன்னாள் சோவியத் அரசுகளில் மட்டு மல்ல, மேற்கு நாடுகளிலும் தேர்தல்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றுள்ளன. இந்தக் கூட்டமைப்புகள் இஸ்ரேலில் உள்ள டெல்அவிவ் மற்றும் ஹைஃபாவைத் தலைமையகமாகக் கொண்டு அமெரிக்காவிலுள்ள பிலடெல்பியா, நியூயார்க், லாஸ்

ஏஞ்செல்ஸ் போன்ற பெரு நகரங்களில் தீவிரமாகச் செயல்படுகின்றன. ருசியக் குற்றக் கும்பல்களில் 24 அமெரிக்காவிலும், 47 ஜெர்மனியிலும், 60 இத்தாலியிலும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

ருசிய நிதி அமைப்புக்குள் புகுந்து கட்டுப்படுத்த முயன்ற 35 பெரும் வங்கியாளர்களைக் குற்றக் கும்பல்கள் தீர்த்துக் கட்டிவிட்டன என்று அதே விசாரணையின் போது அமெரிக்க உளவுத்துறை இயக்குநர் லூயிஸ் பிரீ சாட்சி சொன்னார். ருசிய உள்துறையின் புள்ளிவிவரப் படி, 1993-இல் மட்டும் 28 இலட்சம் குற்றங்கள் நடந்திருப்பதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய பத்தாண்டுகளை விட இது 200 சதவீதம் அதிகமாகும். அவற்றில் 30,000 கொலைக் குற்றங்கள்; அவை அதற்கு முந்தைய ஆண்டை விட 27 சதவீதம் கூடுதலானவை. ருசியாவில் நடந்த தனியார் மயமாக்கலைப் பயன்படுத்திக் கொண்டு 40,000 தொழில் - வர்த்தக நிறுவனங்களை அமைப்பு ரீதியில் திரண்ட கிரிமினல் குற்றக் கும்பல்கள் கைப்பற்றிக் கட்டுப்படுத்துகின்றன என்கிறது ருசிய அறிவியல் கழகத்தின் சர்வதேசப் பொருளாதர மற்றும் அரசியல் ஆய்வுகளுக்கான நிறுவன இயக்குநர் ஸ்வெட்லானா டி. கிளிங்கினா-வின் ஆராய்ச்சி நூல். இந்தக் கிரிமினல் குற்றக் கும்பல்கள் முன்னாள் சோசலிச நாடுகளுக்கு மட்டுமல்ல; பல வெளிநாடுகளுக்கும் தமது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி பெரிய பெரிய வலைப்பின்னல்களை உருவாக்கி இயங்குவது உலக நாடுகள் அனைத்தின் சமூகங்களுக்கும் பயபீதியை ஏற்படுத்தியுள்ளது. சமீபத்தில் மேற்கு வங்கம் புரூலியா மாவட்டக் கிராமங்களில் 35 கோடி ரூபாய் மதிப்புள்ள நவீன ஆயுதஙகளை விமானத்தில் இருந்து வீசியது இத்தகைய குற்றக் கும்பலின் செயல்தான். நியூசிலாந்து, இங்கிலாந்து நாட்டுக் கிரிமினங்கள் இருவரோடு முன்னாள் சோவியத்தான லாட்வியா ருசியர்கள் ஐவரும் சிக்கியுள்ளனர். இந்த ஆயுதக் கடத்தலில் ஈடுபட்டுள்ள கிரிமினல்களின் வலைப்பின்னல் மேற்கே இங்கிலாந்து முதல் பாகிஸ்தான் - இந்தியா - தாய்லாந்து - ஹாங்காங் வழியே கிழக்கே நியூசிலாந்து எனப் பரவியுள்ளது பலரைத் திடுக்கிடச் செய்கிறது.




ரசியா: ஜனநாயக காற்றில் தப்பவில்லை தலைகள்.

ஏகாதிபத்திய சட்டபூர்வ உலகத்துக்குப் பெரும் சவாலாக வளர்ந்துள்ள இத்தகைய குற்றக் கும்பல்களை அம்பலப்படுத்தும் பத்திரிகையாளர்கள் தாம் அவர்களால் முதலில் பழிவாங்கப்படு கின்றனர். 1993-ஆம் ஆண்டு மட்டும் 30 ருஷ்யப் பத்திரிகையாளர் கள் இவர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ''ஜெர்மனி யில் நிலை கொண்டிருந்த ருசிய இராணுவ அதிகாரிகள் நவீன - உயர்ரக ஆயுதம் கடத்துவது'' பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டி ருந்த மாஸ்கோவ்ஸ்கி கம்யோமேட்ஸ் என்ற ஏட்டின் பத்திரிகை யாளர் திமித்திரி குண்டு வைத்துச் சிதைக்கப்பட்டார். ''யார், யார்?'' என்கிற மாஸ்கோ பத்திரிகையின் ஆசிரியரும், நாடாளு மன்றப் பிரதிநிதியுமான ஆந்திரேய் ஆஸ்தேரிஸ் 250 குற்றக் கும்பல்களின் தலைவர்கள் பற்றிய விவரங்களை எழுதி வெளி யிட்டதற்காகப் படுகொலை செய்யப்பட்டார். இறுதியாக, ருசி யப் பொதுத் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநர் விளாடிஸ்லாவ் லிஸ்டியேவ் — அவர் வீட்டின் முன்பாகவே கிரிமினல் குற்றக் கும்பலினால் சுட்டுக் கொல்லப்பட்டது ஏகாதிபத்திய உலகையே அதிர்ச்சியடையச் செய்தது; குறுகிய காலத்தில் மிகமிகப் பிரபல மடைந்த லிஸ்டியேவ், வானொலி மூலம் விளம்பரம் செய்யும்

பணம் முழுவதையும் கிரிமினல் குற்றக் கும்பல்கள் சுருட்டிக் கொள்வதை தடுக்க முயன்றதுதான் அவரது கொலைக்குப் பிரதான காரணம் என்று கூறப்படுகிறது.

''ஜனநாயக மயம்'' என்ற ருசியப் பத்திரிக்கை, ''அமைப்பு ரீதியில் திரண்டுள்ள குற்றக் கும்பல்கள்'' என்கிற தனது சிறப்பிதழில் பின்வருமாறு எழுதியுள்ளது: ''சமுதாயத்தின் அரசியல், சமூக வளர்ச்சியில் அமைப்பு ரீதியில் திரண்ட குற்றக் கும்பல்களால் பாரிய பாதிப்புகள் ஏற்படுகின்றன. தனியார்மயமாக்கலுக்கும் அந்தக் குற்றக் கும்பல்களுக்கும் ஒரு நெருக்கமான பிணைப்பு இருக்கிறது. புதிதாக உருவாகும் மூலதனம் மற்றும் வங்கித் தொழில்கள் கிரிமினல் மயமாவது, உதயமாகும் முதலாளித்துவத்துக்கும் தொழிலாளர் உரிமைக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருக்கிறது. அடுத்தடுத்து ஆட்சிக்கு வருபவர்களுக்கு அமைப்பு ரீதியில் திரண்ட இந்தக் குற்றக் கும்பல்கள் இராணுவம் மற்றும் பாதுகாப்பு விவகாரங்களில் பாதிப்பு ஏற்படுத்துவதாக உள்ளன. அவை சட்ட மரபுகள் மற்றும் குடிமக்களின் மனித உரிமைகளையும் பாதிக்கின்றன. சர்வதேச ரீதியிலும் இவை பாதிப்பு ஏற்படுத்துகின்றன.''



எதிர்ப்பு அலையில் யெல்ட்சின்.

இந்தத் தகவல்கள் காட்டுவதென்ன? முன்னாள் சோலிச நாடுகளின் ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பிறகு, ஏகாதிபத்தியங்கள் வாக்களித்தபடி சுதந்திரமான ஜனநாயக அரசு - சமூக அமைப்பை ஏற்படுத்தவில்லை; குற்றக் கும்பல்களின் ஆதிக்க அதிகாரமே அந்நாடுகளில் கோலோச்சுகின்றன என்பது தான்!

ஜெர்மனியின் பெர்லினில் இருந்து போலந்தின் பிரேக் வரை செல்லும் நெடுஞ்சாலை ஈ-55 இன் 12 கி.மீ நெடுகிலும் ஒவ்வொரு சனிக்கிழமை இரவிலும் 300 விபச்சாரிகள் வரிசையாகத் தம்து வாடிக்கையாளர்களுக்காகக் காத்திருக்கின்றனர். அவர்கள் பேசும் மொழிகளோ செக், ருமேனியன், பல்கேரியன், ஹங்கேரியன், ஜெர்மன்; வாகன ஓட்டிகளும் குடியேற்றத் தொழிலாளர்களுமே இவர்களது மலிவான வாடிக்கையாளர்கள் என்கிறது டைம் ஏடு. ''ஒரு காலத்தில் கறாரான கட்டுப்பாடுகள் நிறைந்த கம்யூனிசக் கிழக்கு ஐரோப்பா இன்று தெருப் பொறுக்கிகள், விபச்சாரிகளின் பன்றித் தொழுவங்களாகிவிட்டன.'' ''வறுமை, அந்நாடுகளின் இளம் பெண்களை மேற்குலகின் சதைக் கிடங்கில் தள்ளிவிட்டது'' என்கிறது அவ்வேடு. மேற்கு ஐரோப்பாவின் விபச்சாரிகளில் கால் பங்கினர் இப்போது முன்னாள் சோசலிச நாடுகளைச் சேர்ந்தவர்களாம்.

''இரும்புத் திரை தகர்ந்தபோது, ஐந்தே ஆண்டுகளில் அரிதாகக் கிடைக்கும் நல்வாழ்வைத் தேடி வறுமையில் சிக்கிய கிழக்கு ஐரோப்பியப் பெண்கள் அலை அலையாக மேற்கு நோக்கி ஓடி வருவார்கள் என்று யாருமே எதிர்பார்க்கவில்லை'' என்கிறது அந்த ஏடு. ஜெர்மனியில் உள்ள 2,00,000 விபச்சாரிகளில் 40,000 பேர் கிழக்கில் இருந்து வந்தவர்கள். 14 நாள் ''விசா'' பெற்றுக் கொண்டு வாரந்தோறும் விமானம் நிறைய துபாய் வந்திறங்கும் ருசியப் பெண்கள் விபச்சாரத் தொழில் செய்து விட்டு வண்ண வானொலி போன்ற நுகர்பொருட்களோடு நாடு திரும்புகின்றனர். பாலுறவுக் காட்சிகள் நடத்தும் மேற்கத்திய நகர இரவு விடுதிகளில் முன்பு ஒரு சதவீதமே கிழக்கு ஐரோப்பியப் பெண்கள் இருந்தனர். மூன்றாண்டுகளில் அவர்களே 50 சதவீதத்தினராகப் பெருகினர்.

இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் 50 ஆக இருந்த விபச்சார விடுதிகள், ருசியர்களின் அலை அலையான வருகையால்

மூன்றாண்டுகளில் 150 ஆக உயர்ந்து விட்டன. சீன நகரங்களிலும், ருசியப் பெண்கள் ஏராளமாக விபச்சாரிகளாகக் குடியேறியுள்ள னர். இத்தாலி, துருக்கியிலும் போலீசு சோதனையில் பல ருசிய, உக்ரைனிய விபச்சாரிகள் சிக்கியுள்ளனர். நடனக் குழுவினர் என்கிற பெயரில் கடத்தப்பட்டு இரவு நாட்டிய, விபச்சார விடுதிகளுக்கு இவர்கள் விற்கப்பட்டனர்.மேலை நாட்டுப் பணக் காரனுடன் "திருமணம்", கைநிறைய சம்பாதிக்கும் ஒழுக்கமான வேலை, நல்ல கல்வி வாய்ப்பு என்று ஆசை காட்டி முன்னாள் சோசலிச நாடுகளில் இருந்து பெண்கள் கடத்தப்படுகின்றனர்.

பெரும்பாலும் எல்லாப் பெண்களுமே கேடாகப் பயன்படுத் தப்படுகிறார்கள். முன்னாள் சோவியத் குடியரசான ஜார்ஜியக் குற்றக் கும்பல்தான் மிகவும் கொடூரமானது. கற்பழித்தும் துப்பாக்கி முனையில் மிரட்டியும் அடித்துத் துவைத்தும் பெண் களை விபச்சாரத்திற்குக் கட்டாயப்படுத்தித் தள்ளுகிறது என்கி றார், 40 கிழக்கு ஐரோப்பியப் பெண்களை மீட்ட சமூக சேவகர் பீட்டர் சொரேன்சோன். அதற்கு இணையான கொடூரமானவை பெர்லினிலும், பிரேக்கிலும் உள்ள செசேன் பையன்கள், வட காகசியன்கள் எனப்படும் குற்றக் கும்பல்கள், ஆயுதங்கள், கள்ளப்பணம், போதை மருந்து, பெண்கள் வியாபாரத்தில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். பிரஸ்ஸெல்சில் உள்ள "லீ நிட்" என்ற சமூக சேவைத் தலைவர் ஃபிரென்சைன் மீர்ட் கூறுகிறார்: "பல பெண்களுக்கும் பல்லுடைந்து போயிருக்கிறது. மாடிப்படி களில் விழுந்து விட்டதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவர்களில் பலரும் மிக மோசமான படிக்கட்டுகளில் தமது தொழில்களைச் செய்கிறார்கள் அல்லது முகத்தில் குத்தப்படுகி றார்கள்." ஜெர்மனியின் பாட்சென் நகர விபச்சார விடுதி ஒன்றில் பெண்கள் மட்டைகளால் அடித்து, மின்சார அதிர்ச்சியும் தரப் பட்டு, விபச்சாரத்திற்குக் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். அதற் காக பிரேக்கில் பெண்கள் சவரக் கத்திகளால் வெட்டப்பட்டனர் என்று தெரிய வந்திருக்கிறது. "ஒரு கிலோ ரொட்டியை விற்பது போல ருமேனியாவில் பெண்களை விற்கின்றனர்" என்கிறான் ஒரு விபச்சாரத் தரகன். இது பெல்ஜிய வானொலியிலேயே ஒளிபரப்பப்பட்டது.

## முதலாளித்துவ கும்பலின் முகத்திரை கிழிந்தது

இப்போது மேற்குலகை ஆட்டிப்படைக்கும் உல்லாச வாழ்க்கை எனப்படும் நச்சுக் கலாச்சாரம் முன்னாளைய சோசலிச நாடுகளிலும் வேகமாகப் பரவி வருகிறது. போதை மருந்து, ஓரினச் சேர்க்கை, காம வெறியாட்டம் போடும் கும்பல் பாலுறவு இவற்றின் விளைவாக "எயிட்ஸ்" போன்ற சாவு நோய்கள் காய்ச்சி ஊற்றிய ஈயத்தைப் போல இச்சமுதாயங்களையும் பற்றிக் கொண்டு விட்டது. உலகின் வேறு எந்த வகையான நாடுகளிலும் இந்த மாதிரியான கழிசடைப் பண்பாடு தொற்று நோயாய் சமூகத்தைக் கவ்வி விடுவது வியப்புக்குரியதல்ல. ஆனால் உலக அறிஞர்கள் பலரும் போற்றக்கூடிய அளவு பெண் சமத்துவம், சபோத்நிக்குள் - கம்சமோல்கள் போன்ற சமூக உழைப்பு ஆகிய உன்னத இலட்சியங்களை எட்டிய சமுதாயங்களில் இத்தகைய இழிநிலையா? பாசிசப் படைகளை வென்று புரட்சிப் போர் களை நடத்தி, விவசாயத் தொழில்கள், அறிவியல் - தொழில் நுட்பத்தில் விண்ணை முட்டும் சாதனைகள் பல புரிந்த நாடுகளில் இத்தகைய இழி நிலையா?

கம்யூனிசம் - சோசலிசம் என்பது இட்லரின் நாசிசம், முசோலினியின் பாசிசம் போன்று கொடியது என்று அவதூறு செய்து, சதிகள் பல புரிந்து, இறுதியில் அந்த சமுதாயத்தை வீழ்த்தியதற்காக எக்காளமிடும் ஏகாதிபத்தியவாதிகள் இறுதியில் சாதித்ததென்ன? கம்யூனிசத்தின் பிடியிலிருந்து அந்நாடுகளை விடுவித்து சுதந்திரமான, ஜனநாயக சமுதாயமாக மாற்றப் போவதே தமது இலட்சியம் என்றார்கள். இறுதியில் கண்டது அரசியல் அதிகாரம், விவசாயம் - தொழில் - வியாபாரம், பண்பாடு - நாகரிகம் ஆகிய சமுதாயத்தின் அனைத்து வாழ்வி லும் கிரிமினல் கும்பல்களின் ஆதிக்கத்தைத்தானே! நற்பண்புகள் மிக்க கம்யனிசம் வீழ்ந்தது! முதலாளித்துவ ஏகாதிபத்தியங்கள் வென்றன! ஆம்! கிரிமினல் குற்றக் கும்பல்கள் என்பதே முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் மிகக் கொடிய கழிசடைப் பிரிவு தானே!

## வரலாற்று மோசடிக்கு ஒரு வகை மாதிரி

# இது கம்யூனிசத்தின் வெற்றியா?

அண்மையில் போலந்து அதிபர் தேர்தலிலும், ரசியாவின் நாடாளுமன்றத் தேர்தலிலும் போலிக் கம்யூனிஸ்டுகள் வெற்றி பெற்றுள்ளதைத் தொடர்ந்து, இந்நாடுகளில் மீண்டும் கம்யூனிசம் காலூன்றத் தொடங்கி விட்டதாக இந்தியப் போலிக் கம்யூனிஸ்டுகள் மாய்மாலம் செய்து வருகிறார்கள். நான்காண்டுகளுக்கு முன்பு ரசியாவில், கம்யூனிசத் தலைவர்களின் சிலைகளை உடைத்து, செங்கொடிகளை எரித்து, சுதந்திரம் - ஜனநாயகம், சந்தைப் பொருளாதாரம் என்ற ஆரவாரத்தோடு ஆட்சிக்கு வந்த அதிபர் யேல்ட்சின், அடுத்த சில மாதங்களிலேயே அம்பலப்பட்டுப் போனார். வேலையின்மை, கதவடைப்பு, ஊதிய முடக்கம், விலையேற்றம், வறுமை, விபச்சாரம், மாஃபியாக்களின் கொட்டம் என ரசியா இதுவரை காணாத பின்னடைவுக்குள்ளாகி, முதலாளித்துவ சீர்திருத்தக் கொள்கைகள் படுதோல்வியடைந்து, நெருக்கடி முற்றியது. இதனால் மக்களிடம் நிலவிய வெறுப்பையும் அதிருப்தியையும் சாதகமாக்கிக் கொண்டு, பழைய போலிக் கம்யூனிசப் பெருச்சாளிகள் தற்போது நாடாளுமன்ற கீழ்சபையில் (டூமா) கணிசமான அளவுக்கு வெற்றி பெற்றுள்ளனர்.

இதே போல, ரசியாவை அடுத்துள்ள போலந்தில், கம்யூனிசம் சோசலிசத்தின் பெயரால், ஏற்கனவே நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்றுள்ள போலிக் கம்யூனிஸ்டுகள், இப்போது அதிபர் தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

பல்கேரியா, பால்டிக் நாடுகளைத் தொடர்ந்து இப்போது ரசியாவிலும் போலந்திலும் போலிக் கம்யூனிஸ்டுகள் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளதைக் காட்டி, இந்நாடுகளில் மீண்டும் கம்யூனிசம் காலூன்றத் தொடங்கி விட்டதாகப் பெருமை கொள்ள முடியாது. ஏனெனில் போலந்தில் முன்பு அதிகாரவர்க்க முதலாளித்துவத்தை நிலை நாட்டிய இப்போலிகள், தனியார் மயம், சந்தைப் பொருளாதாரம் ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொண்டு புதுப்பணக்காரர்களாக இப்போது மாறி விட்டனர். ''மனித முகம் கொண்ட முதலாளித்துவம்'' ''ஜனநாயகமும் சந்தைப் பொருளாதாரமும் கொண்ட ஆட்சி'' என்பதே இவர்களின் தேர்தல் வாக்குறுதியாக உள்ளது. போலந்தின் புதிய ''கம்யூனிஸ்டு'' அதிபரின் மனைவியே வீட்டு மனைத் தொழிலில் கொடி கட்டிப் பறக்கும் புதுப்ப

ணக்கார கும்பலைச் சேர்ந்தவர்தான். இதனாலேயே மேற்கத்திய ஏகாதிபத்தியங்களும் இப்புதுப் பணக்கார 'கம்யூனிஸ்டு' ஆட்சியை வரவேற்கின்றன.

அது போலவே, ரசியாவில் வெற்றி பெற்றுள்ள போலிக் கம்யூனிஸ்டுகளும் முதலாளித்துவத்துக்கு எதிரானவர்கள் அல்லர். ''அந்நிய முதலீடுகளை நாங்கள் எதிர்க்க மாட்டோம். பொருளாதாரக் குளறுபடிகளைச் சரி செய்து ரசியாவை வல்லரசாக மாற்றுவோம்'' என்று தான் போலிக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவரான கென்னடி ஜுகானாவ் கூறுகிறார். அதே சமயம் ''மக்களிடம் உள்ள கம்யூனிச உணர்வைச் சாதகமாக்கிக் கொண்டு, நாட்டின் மையமான தொழில்களை அரசுடமையாக்குவோம்; தனியாருக்கு விற்பதைத் தடுப்போம்; மீண்டும் சோவியத் ஒன்றியத்தைக் கட்டியமைப்போம்'' என்று சவடால் அடிக்கிறார். இதற்காக தேசிய வெறி பாசிஸ்டுகளான ஜிரினோவ்ஸ்கி கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

சோசலிச கூட்டுப் பண்ண்ணகள் அழிப்பு, தனியுடைமை, முதலாளித்துவ அரசு, மேற்கத்திய கலாச்சார, மூலதன ஆதிக்கம் என்று முன்னாள் போலி சோசலிச நாடுகள் பகிரங்கமாகவே முதலாளித்துவ முறைக்கு மாறி விட்டன. ஆனாலும் சீனா, கியூபா, வியட்நாம், லாவோஸ் ஆகிய நாடுகளில் சோசலிசம் நீடிப்பதாக நம்பூதிரி கும்பல் நியாயப்படுத்துகிறது. இந்த மாற்றங்களை சோசலிசத்தின் வளர்ச்சிக் கட்டத்தில் முன்னேற்றம், சோசலிசத்தின் வேறுபட்ட வடிவம், மண்ணுக்கேற்ற சோசலிச முறை என்று இந்தியப் போலிகள் வெட்கமின்றி ஆதரிக்கின்றனர். வேடிக்கை என்னவென்றால், முன்பு ரசியாவின் பிரஷ்னேவ் கும்பலை இப்போலிகள் விசுவாசமாக ஆதரித்தனர். பின்னர் கோர்பியின் கிளாஸ் நாஸ்ட், பெரஸ்த்ரோய்கா எனும் முதலாளித்துவ மீட்சியையும் ஆதரித்தனர். இப்போது ரசிய முதலாளித்துவ ஆட்சி முறையில் நிறுவனமாகிவிட்ட போலிக் கம்யூனிஸ்டுகளையும் ஆதரிக்கின்றனர். ''மீசை வைத்தால் வீரன்; மீசையை எடுத்தால் ஞானி'' என்று கம்யூனிசம் - சோசலிசத்தின் பெயரால் யார் வெற்றி பெற்றாலும், ஆட்சியமைத்தாலும் அதை ஆதரிப்பதுதான் இந்தியப் போலிகளின் பிழைப்புவாத சித்தாந்தமாக உள்ளது. போலிகளின் இந்தப் பித்தலாட்ட மோசடிகளை புரட்சிகர அணிகள் அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டும்.

**(16, டிச.95 புதிய ஜனநாயகம் இதழ் தலையங்கத்தின் சுருக்கம்)**

# எமது வெளியீடுகள்

- மார்க்சிய மூல நூல்களுக்கு வாசகர் வழிகாட்டி
  - மாரிஸ் கார்ன் போர்த் — ரூ. 35.00
- வதைக்கப்படும் மக்களும் புதைக்கப்படும் உரிமைகளும்
  - கோவிந்த முகோத்தி — ரூ. 7.00
- தலித் அரங்கியல்
  - கே.ஏ. குணசேகரன் — ரூ. 16.00
- வஞ்சக வலைவிரிக்கும் தன்னார்வக் குழுக்கள் — ரூ. 6.00

